REGD M 4642

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7,
½ „ 3 8 0

திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 24—7—49 | இதழ் 4

கழகத் தோழர்கள் கருத்து

தனி மாநாடு கூட்டவேண்டும்

இதுகாறும் இயக்கத்தில் பல இன்னல்களுக்கிடையே, கொள்கை ஒன்றுதான் பெரிது என்று கருதி, எவ்வித எதிர்ப்பையும், கஷ்ட நஷ்டத்தையும், பொருட்படுத்தாமலும், சென்ற 20 வருடங்களாகப் பெரியார் ஒருவரே எங்கள் தலைவர், அவர் எந்தப் பாதையில் சென்றாலும் அது நியாயம் என்று எங்கள் பகுத்தறிவுக்குப்பட்ட வரையிலும் உழைத்த என்போன்ற தொண்டர்கள் பெரியாரின் திருமணச் சேதி கேட்டு மனம் புண்பட்டோம். "பெரியார் தனது திருமண ஏற்பாட்டைக் கைவிட்டு, கழகத்துக்கு வார்சு ஏற்படுத்தல் என்ற எண்ணத்தையும் கைவிடும் வரையில், கழகத் தோழர்களைப் பொதுப்படையாக தூற்றியதை வாபீசு வாங்கும் வரையில் அவர் தலைமையில் கழகப் பணியாற்றாமல் விலகிநிற்போம்" என்று "திராவிடநாடு" பத்திரிகையில் நானும் எனது நண்பர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி போன்ற நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்களும் கையெழுத்திட்டு ஒரு அறிக்கை வெளியிட்டோம். அதை நூற்றுக்கணக்கான கழகங்களும், ஆயிரக்கணக்கான கழகத் தோழர்களும் ஆதரித்து எழுதினார்கள். தோழர் அண்ணாத்துரை அவர்கள் தூண்டுதலாலோ, அல்லது பெரியார் அவர்கள் குறிப்பிடும் "விஷமிகள்," "சூதுக்காரர்கள்" "சூழ்ச்சிக்காரர்கள்" "தலைமைப்பதவியை விரும்பும் பதவிவேட்டைக்காரர்கள்" "அவர் பொருளை அபகரிக்க விரும்பும், கொலை செய்ய முயற்சிக்கும் கயவர்கள்" தூண்டுதலாலோ நான் கையெழுத்திடவில்லை. "தினசரி" பத்திரிகையில் பெரியார் திருமணம் செய்துகொள்ளப் போவதாகவும் சென்னை ரிஜிஸ்டிரார் ஆபீசில் திருமண நோட்டீஸ் கொடுத்திருப்பதாகவும், இதைதடுக்கப் பெரியாரிடம்ஏற்காட்டுக்குக் கழகத்தோழர்கள் சென்று இருப்பதாகவும் நகரில் பலமான வதந்திஉலாவுகிறது என்ற செய்தியைப் படித்தவுடன் சென்னை சென்றேன். ரிஜிஸ்டிரார் ஆபீசுக்கு சென்றேன், தகாத காரியம் செய்யப் போவதைக் கண்ணால் கண்டேன், கண்கலங்கிலேன். 15-வருடமாகப் பெரியாருடன் பழகியதால், அவர் இயல்பு அறிந்தவனாதலால், அவர் எண்ணியதைச் சாதிப்பார், எத்தகைய எதிர்ப்பையும் பொருட்படுத்தமாட்டார் என்று எண்ணியே நான் அவரைக் காணவுமில்லை. இவ்வேற்பாட்டைக் கைவிடுமாறு கெஞ்சவுமில்லை. அப்பொழுதே தீர்மானித்தேன் சமுதாய வாதியின் தலைமையில் உள்ள சமுதாயஇயக்கம் இனித் தக்க புதிய அரசியல்வாதியின் தலைமையில் திராவிடக்கழகம் அரசியல் இயக்கமாக விளங்கப் போகிறது என்று எண்ணியே, பெரியார் எங்களுக்குச் சமீபத்தில் வழிகாட்டிய, கண்திறந்த வள்ளுவர் காட்டிய

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பதிழுக்கு"

என்ற வழிப்படி அறிக்கையில் கையெழுத்திட்டேன். நிர்வாக கமிட்டித் தலைவர் தோழர் தி. பொ. வேதாசலம் அவர்களை நிர்வாகக் கமிட்டி கூட்டுமாறு வேண்டினோம். அவரும் 10-7-49-ல் கூட்டத்தை கூட்டினார். ஆனால், அதைபெரியார் "வேதாசலம் சொந்தஅழைப்பு என்றே அவரது அழைப்பிலிருந்து தெரிகிறது. ஆதலால் அது ஒரு 'இன்பார்மல்' என்ற ஆங்கிலத்தின் சொல்லின் பொருள்படி மக்கள் கருத்து பரிமாறிக் கொள்ளும்படியான அதாவது பதிவுக்கு அவசியமில்லாத பேச்சுக்கூட்டமாக இருக்கலாம்" என்று சா

வாதிகாரமுறையில் நிர்வாகத்தலைவரையும், நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களான எங்களையும் அவமதித்தும் அலட்சியப்படுத்தியும் 6—7—49-ல் "விடுதலை"யில் எழுதினர். நிர்வாகக் கமிட்டி 10—7—49-ல் திருச்சியில் தி. பொ. வேதாச்சலம் இல்லத்தில் கூடியது. 32-பேர் வந்தவர்களில் ஒருவர்தவிர 31-பேர் திருமண ஏற்பாட்டை நிறுத்த வேண்டிக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி ஒரு தூதுக்குழு அமைத்தனர். அன்று மாலையே திருமணம் நடந்த செய்தி கிடைத்தது. நாங்கள் தி.பொ.வே. அவர்களை மேலும் பெரியாரின்டிரஸ்ட் ஈடு விவரம் தெரியும் வரையில் கழக சம்பந்தமான எந்தவிதமான பொதுக்கூட்டமும் நடைபெறவேண்டாம் என்று அறிக்கைவிடக் கேட்டுக்கொண்டோம். அவர், அதற்கு மாறாக "திருமணம் முடிந்துவிட்டது. நடந்ததை மறந்துவிட்டு, எப்போதும்போல் ஒவ்வொருவரும் ஒரு பெரியாராய் மாறி கழக வேலையை முன்னிலும் பன்மடங்கு அதிகமாக நடத்தவேண்டும்" என்று அறிக்கைவிட்டார். ஏமாற்றமடைந்தோம்.

பெரியார் "விடுதலை" பத்திரிகை 8—7—49-ல் இதழில் "விளக்கம்கேட்ட தோழர்களுக்கு" என்ற கட்டுரையில் "இயக்கம் இன்று அமைப்பாகவே இருக்கிறது. இயக்கத்துக்குத் தலைவர், நிர்வாகக் கமிட்டி, கிளைக்கழகங்கள் முதலியவை இருக்கின்றன. இவைகளை யார் மாற்றக்கூடும்? இதில் தனிப்பட்டவர்களுக்கு என்ன உரிமை ஏற்பட்டுவிடும்" என்று எழுதியபடி ஜனநாயக முறைப்படி, நாங்கள் விரும்பும்படி தனிமாகாடுலென்றுகூட்டி புதியதலைவரை தேர்ந்தெடுக்க எங்களுக்கு வாய்ப்டைக் கொடுத்து கட்சிநிதியை மாநாடு தீர்மானிக்கும் பொறுப்பாளர்வசம் ஒப்புவிக்கவேண்டும். சிறை செல்லும் தலைவர் இனிதே சென்று மீண்டும் வெளிவந்தவுடன் இவ்வேற்பாடுகளைச் செய்துவிட்டு. ஓய்வெடுத்து மணவாழ்க்கையை இனிதே நடத்தப்பெரிதும் விழைகின்றேன். அதுவரை கழகத்தோழர்கள் எவ்விதமான கூட்டத்திலோ, நிகழ்ச்சிகளிலோ கலந்துகொள்ளாமலும் நிதானமிழக்காமலும் மாற்றுக்கட்சிக்கு இடம்கொடுக்காமலும் நடந்துகொள்ளப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.

செ. இரா. சுப்பிரமணியன்.

தி. க. மாகாண நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.

★

தலைமையில் நம்பிக்கையில்லை

பெரியார் ஈ. வே. இராமசாமி தோழியர் மணியம்மையைத் தனது 72-வது வயதில் திருமணம் செய்துகொண்டதன் விளைவாக ஏற்பட்ட இழிவு நம் நாட்டிற்கும், திராவிட கழகத்திற்கும், திராவிட சமுதாயத்திற்கும் மறைக்கமுடியாத ஒரு மாசு ஆகும். அவரைப் பின்பற்றிய பல்லாயிரக்—கணக்கான திராவிடத் தொண்டர்கள் மனம் புண்படும்படியான இந்த நடவடிக்கையை என்போன்ற ஊழியர்கள் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது.

அடுத்தடுத்து வெளியிட்டு வருகிற தமது அறிக்கைகளிலெல்லாம், பெரியார், இயக்க ஊழியர்களை ஏளனம் செய்யும் முறையிலேயே விளக்கம் தந்து வருகிறார்.

தன்னைக் கொலைசெய்வதற்குச் சதிகாரர்கள் கொடுவாளுடன் திரிவதாகக் கூறுவதுடன் — அது கழகத்தைச் சேர்ந்தவர்களின் தூண்டுதல் காரணமாக நடைபெறுகிற சதிச் செயல் என்னும் முறையிலேயே எழுதியுள்ளார். மானமுள்ள சுயமரியாதைக்காரன் பெரியார் தலைமை தேவையில்லை என்ற காரணத்துக்காகக் கொலை செய்யும் பணியில் ஈடுபடுவான் என்று அவர் சொல்வதை என்போன்றவர்கள் ஒப்புக்கொள்ள முடியாது.

எங்களைப் பெற்று வளர்த்த தந்தையாரைவிட அதிக மதிப்பும் பெருமையும் அளித்து அவரைப் பெரியார் என்றும் 'ஐயா' என்றும் உருக்கமாக உயர்த்தி வந்தோம். எனினும் அவருடைய போக்குப் பிடிக்காத காரணத்துக்காக சௌந்தரபாண்டியன், பொன்னம்பலனார், விஸ்வநாதன் போன்றவர்களும், இன்னும் பல திராவிட சமுதாய சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர்களும் விலகிக் கொண்டுள்ளனர் பெரியாரே சந்தேகப்படுகிறவர்களை நீக்கியும் கண்டித்தும் வந்திருக்கிறார்.

அப்படியிருக்க, கண்டனத்துக்கும் நீக்கத்துக்கும் ஆளானவர்கள் ஒதுங்கியிருப்பார்களே தவிர—பலாத்கார நடவடிக்கைகளில் இறங்குவார்கள் என்று எண்ணுவது தவறு.

மானமுள்ள திராவிடன் ஒருவன் வெளியே தலைகாட்ட முடியாத ஒரு சூழ்நிலையைத் தாமே அமைத்துக் கொண்டு—திராவிடர் கழகம் என்ற பாசறையில் அணிவகுத்திருந்த அரிய தொண்டர்களைத் தகர்த்துக்கொண்டு—மீண்டும் என்போன்ற ஊழியர்கள் மனம் புண்படும்படியாக இயக்கத் தோழர்களைப் பச்சை பச்சையாகக் கண்டிப்பதை நாங்கள் ஒருபோதும் பொறுக்க முடியாது.

மேலும் பெரியார் தலைமையில் நம்பிக்கையில்லை என்பதைத் திராவிடர் கழக மத்திய கமிட்டியின் மூலம் தெரிவித்து முடிவுசெய்ய வேண்டுமாதலால், திராவிடர் கழக மத்திய கமிட்டியை உடனடியாகக் கூட்டி இந்நிலை குறித்து ஆலோசனை செய்யும் வாய்ப்பை அளிக்குமாறு தலைவர் டி. பி. வேதாசலம் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஈ. வே. அ. வள்ளிமுத்து.

தி. க. மாகாண நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.

★

பணியாற்ற முடியாது

பெரியார் திருமணம் செய்துகொண்டது இயக்கக் கொள்கைக்கு முரண்பட்டதும் இயக்கத்தைக் கெடுக்ககூடியது மான இச்செயலைக் கழகத்தவர் ஆயிரமாயிரவர் வேண்டாம் வேண்டாம் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டும், விடாப்பிடியாகச் செய்து முடித்துவிட்ட

4-ம் பக்கம் பார்க்க

வழக்கு நிதி நன்கொடை

“திராவிடநாடு” பத்திரிகைக்கு ஜாமீன் கட்டும்படி சர்க்கார் கேட்டது பத்திரிகைச் சுதந்தரத்தைப் பறிப்பதாகும் என்று கருதிப், பல தோழர்கள், இது குறித்து வழக்குமன்றம் ஏறி நியாயம் பெறவேண்டுமென்று வற்புறுத்தி, வழக்காடுவதற்கு வேண்டிய பொருள் உதவியும் செய்துவருகிறார்கள். நன்கொடை உதவியவர்களின் விபரம் கீழே குறிக்கப்படுகிறது:—

கே. கிருஷ்ணசாமி	சென்னை	1—1—0
எம். வி. சொக்கலிங்கம்	சேலம்	25—0—0
ஆர். வி. ஜெயராமன்	”	5—0—0
டி. என். கனகராஜு	”	3—0—0
ஆர். கோசலம்	”	2—0—0
அப்துல்கனி	கோரிக்கான்	5—0—0
த. ச. ஏழுமலை	காஞ்சிபுரம்	0—8—0
வி. பி. ராசு	கோபிசெட்டிபாளையம்	0—8—0
இராமசாமி	”	0—4—0
கே. ஆர். புருஷோத்தமன்	கோவை	2—2—0
அரு. அருணசலம்	”	1—0—0
ராம. பழனியப்பன்	”	1—0—0
மு. பழனியப்பன்	”	1—0—0
நா. சுந்தரம்	”	1—0—0
கே. எஸ். காசிம்	திருச்சி	1—0—0
வி. விசுவநாதன்	செயங்கொண்டான்	1—0—0
எம். பட்டிலிங்கம்	கோவை	2—0—0
வி. மாணிக்கம்	ஜோலார்பேட்டை	3—0—0
பெ. ச. அப்துல் ரசாக்	கலியநல்லூர்	0—8—0
ந. க. அல்லா பிச்சை	”	0—8—0
ரா. பிரமநாயகம்	”	0—8—0
எ. இராமசாமி	நாகப்பட்டினம்	10—0—0
ஜி. அய்யாதுரை	திருச்சி	1—1—3
அப்பாச்சி கவுண்டர்	ஆலவாய்ப்பட்டி	1—0—0
எம். என். கிருஷ்ணமூர்த்தி	யாதமூர்	0—8—0
ச. இராசலிங்கம்	திட்டக்குடி	3—0—0
பி. உலகநாதன்	செங்கோட்டை	1—0—0
கே. பி. சிவன்	போடிநாயக்கனூர்	2—0—0
ச. மாதவன்	அரகண்டநல்லூர்	5—0—0
எஸ். கிருஷ்ணசாமி	மதுரை	5—0—0
கே. எஸ். ஜகப்பன்	காமய்ய கவுண்டன்பட்டி	1—0—0
எம். டி. பொன்னப்பன்,	காமய்ய கவுண்டன்பட்டி	1—0—0
எல். இராமராஜ்,	”	1—0—0
பி. கிருஷ்ணசாமி, அரக்கோணம்		0—8—0
ஆர். சீனிவாசன், பழஞ்சநல்லூர்		0—8—0
ஆர். குஞ்சு,	”	0—8—0
ஜே. பாஸ்கரன், பெங்களூர்		2—0—0
பி. ஆர். கே. மேழிச்செல்வன், கரூர்		1—0—0
பி. பழனிசாமி, வேட்டயன்பாளையம்		2—0—0
கே. எ. முருகேசன், கனியூர்		10—0—0
பி. ஆர். சிவன், தென்காசி		2—3—0

ஆர். பொதுராஜா, கருவூர்		0—8—0
என். பத்மநாதன், புள்ளம்பாடி, திருச்சி		1—0—0
சு. காளிமுத்து, அருப்புக்கோட்டை		0—8—0
அ. சுப்பிரமணியன்,	”	0—8—0
சு. நடராசன்,	”	0—8—0
தர்மலிங்கம்,	”	0—8—0
அ. வெ. சுப்பிரமணியம்,	”	0—4—0
சு. சுப்ரமணயம்	”	0—4—0
ரா. ம. கணபதி,	”	0—4—0
மிஸ்ஸிஸ். சுசீலசுந்தரம், சென்னை		1—0—0
ப. கிருஷ்ணசாமி, மேட்டுப்பாளையம்		0—10—0
சுகிசா, மட்டாஞ்சேரி		3—0—0
ஜி. தியாகமுத்து, ஸ்ரீவைகுண்டம்		2—0—0
தா கிருபாகரன், பிடாகம்		0—12—0
சி. மகாலிங்கம், அம்பத்தூர்		1—0—0
அ. க. இராமசாமி, வேடசந்தூர்		0—6—0
வி. டி. இராசன், விருதுநகர்		0—8—0
எஸ். பி. அண்ணாமலை, தூத்துக்குடி		3—0—0
எஸ். லட்சுமணன், பெங்களூர்		1—0—0
ப. உ. சண்முகம், திருவண்ணாமலை		50—0—0
பாலகிருஷ்ணன்,	”	10—0—0
ஆர். தர்மலிங்கம்,	”	10—0—0
மு. ர. தேவராசன்	”	10—0—0
டி. எஸ். நாராயணன்	”	10—0—0
கே. ராஜாராம்	”	10—0—0
வானவட்டி ரத்தினம்	”	1—0—0
தெ. சி. க. இராமசந்திரன்	விருதுநகர்	1—0—0
தெ. சி. க. சின்னப்பன்	”	1—0—0
தெ. சி. க. சோமசுந்தரம்	”	1—0—0
மு. பழனிசாமி	ஒட்டநாதம்	0—8—0
ந. புத்துபுதியவன்	”	0—8—0
வெ. ச. சின்னக்கனி	”	0—8—0
சு. பாலகிருஷ்ணசாமி	”	0—8—0
தெ. நாகமணி	”	0—8—0
வயிரவன்	”	0—8—0
இராமசுப்பு	”	0—8—0
என். எஸ். சண்முகவடிவேல்	கரந்தை	2—0—0
எம். ஜகன்நாதன்	தாம்பரம்	1—0—0
எம். எ. தாஸ்	”	1—0—0
திருமதி. பாப்பாத்தியம்மாள்	”	1—0—0
எம். பி. வி. பி. பி. கே. கிளார்க்	திருச்சி	3—0—0
எ. சின்னசாமி	ஆலமரத்துப்பட்டி	5—0—0
டி. தில்லைநாயகம்	சிதம்பரம்	5—0—0
என். கோவிந்தராசு	திருமலவாடி	2—0—0
எ. விஸ்வநாதன்	பவானி	0—12—0
டி. வி. சுவாமி	ரங்கோன்	50—0—0
எம். பாஸ்கரன்	மாணம்துரை	1—0—0
வி. எஸ். மணி	திருவனந்தபுரம்	1—[illegible]
ஆர். சன்முகம்	”	1—[illegible]

ஏ. நயினர்	"	1—0—0
வி. முத்தய்யன்	"	1—0—0
வி. குமாரசாமி	"	1—0—0
பி. கே. சங்குநாதன்	ஆலம்பட்டு	2—0—0
வி. சு. இராமச்சந்திரன்	வேப்பங்குளம்	2—0—0
ஏ. எல். உடையப்பன்	அ. சிறுவயல்	2—0—0
அ. புது. ஆ. ஆறுமுகம், பாம்பே		2—0—0
சவுரிவிஸ்வாசம், திருநெல்வேலி		0—8—0
இ. இன்னசி,	"	1—0—0
முத்தய்யா,	"	1—0—0
டி. காலாகாலன், கரந்தை		2—0—0
வி. முத்துகிருஷ்ணன், ஆழ்வார்த்திருநகரி		1—0—0
எம். ஆர். சந்திரன், சென்னை		1—0—0
எஸ். வி. தியாகராசன்	"	1—0—0
எஸ், வேதமணிபிரதர், தூத்துக்குடி		2—0—0
கே. ஆர். ஆர். கிருஷ்ணன் நாடக சபையின் நாடகவசூல் மூலம்		1150—0—0
		1476—15—3
முன்கையிருப்பு		1046—3—5
ஆகமொத்தம்		2523—2—8

கழகத் தோழர்கள் கருத்து

2-ம் பக்கத் தொடர்ச்சி

வரின் தலைமையிலே இருந்து பணியாற்ற முடியாது. அவருடைய தலைமையிலே கழகம் இருக்கும் வரை கழகப் பணியிலிருந்து விலகிக் கொள்கிறேன்.

எஸ். நீதிமாணிக்கம்,

தி. க. மாகாண நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.

★

நம்பிக்கை பறந்துவிட்டது

தலைவர் பெரியார் அவர்களின் திருமணவிஷயமாய் எவ்வளவோ கண்டனக்கணைகள் விடுத்தும், அவைகளை பொருட்படுத்தாது அவர் எதேச்சாதிகாரப் போக்குடன் தனது ஆசையை நிறைவேற்றிக்கொண்டார். அவருடைய தலைமையில் கொஞ்சநஞ்சமிருந்த நம்பிக்கையும் பறந்துவிட்டது. இந்நிலையில், தக்கவர்கள் முன்னின்று, நல்லதொரு வழி காட்டி நாட்டுமக்களை நடத்திச்செல்ல வேண்டுகிறேன். எண்ணற்ற இளம்வீரர்கள், என்றும்போல், அணிவகுத்து நிற்பார்கள். வெற்றிநோக்கே!

M. S. M. முகையதீன்,

தி. க. தலைவர்.

கோமளீஸ்வரன்பேட்டை, சென்னை 2.

★

தலைமை மாறுவது அறிவு வளர்ச்சியே

தலைவர் பெரியாரவர்களின் திருமணம், இயக்கத்தின் வாரிசு, இயக்கத்தில் யாரிடத்தும் நம்பிக்கையில்லாத் தன்மை ஆகியவை என்றால் எக்காரணங்கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகும். யாரிடத்திலும் நம்பிக்கையில்லாத ஒரு தலைமையில் எனக்கு எப்போதும் நம்பிக்கை இருந்ததே இல்லை. ஆனால் தலைமை மாறுவது மூலம் இயக்கம் அழிந்துவிடுமென்று நம்புபவனுமல்ல. தலைமை மாறுவது அல்லது மாறவேண்டுமென்ற உணர்ச்சி உண்டாவது இயக்கத்தின் அறிவு வளர்ச்சியினையே காட்டுவதாகும். மேலும் இதனைக் குழப்பிக் கொண்டிருக்காமல், அறிவுக்குப் பொருத்தமான ஒரு முடிவுக்கு வந்து பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்ட திராவிடத் தனியரசு நிறுவனத்துக்கான நற்பணியில் ஈடுபடுவோமாக.

என். ஜீவரத்தினம், சென்னை.

* * *

ஒன்றுகூடிப் பேசுவோம்

தாங்கள் அனுப்பிய வேண்டுகோள் பிரதிகள் கிடைக்கப்பெற்றேன். அவைகளை வெளியில்எல்லோருக்கும் கொடுத்தேன். தங்களுடைய அபிப்பிராயப்படியேதான் எல்லோரும் இருக்கின்றார்கள். பெரியாரவர்கள் உடுமலை வழக்கு முடிந்து சிறை சென்றாலும், முடிந்து வந்தபின்பு ஏதாவது ஒரு இடத்தில் முக்கியஸ்தர்களெல்லாம் ஒன்றுகூடிப்பேசி, பின்பு ஒருமாநாடுகூட்டி வேண்டுவன செய்துகொள்ளலாம். இதே அபிப்பிராயத்தைத்தான் தோழர் W. P. A. S. அவர்களும்சொன்னார்கள். சமயத்தில் தெரிவித்தால் இந்தப்பக்கம் ஆவன செய்கிறேன். நமக்கு அதிக ஆதரவு இருக்கிறது.

டி. ஆவடையப்பன்,

தலைவர் தி. க. சோழவந்தான்.

* * *

பகுத்தறிவைப் பரிசோதிப்பதாகும்

அடிப்படை இலட்சியத்தில் சிறந்த ஒன்றை — பலநாள் சிறப்பித்துக் கூறிவந்த ஒன்றை — சொந்த நடத்தை மூலம் தவிடு பொடியாக்கிவிட்டு, அவ்வாறு செய்வதும் அந்த இலட்சிய பாதுகாப்புக்கும் வெற்றிக்குந்தான் என்று பேசுவது, கழகத் தோழர்களின் பகுத்தறிவையே பரிசோதிப்பதுபோல் இருக்கிறது. பெரியார் தவிர்த்து, வேறு எவர் பேசினாலும்—செயலாற்றினாலும், மக்கள் மறந்துவிடுவர் — மன்னித்துவிடுவர். தனித் தலைவர் என்னும் சிறப்புக்குரியவர்—சிறப்பிக்கப்பட்டவர்—தவறிழைப்பது மறக்கக்கூடியதுமன்று—மன்னிக்கக் கூடியதுமன்று.

காஞ்சி. கல்யாணசுந்தரன்.

ஆசிரியர் "தொழிலாளர் மித்திரன்"

தடுத்தே ஆக வேண்டும்

[வி. உருக்குமணி—குடந்தைக் கல்லூரிமாணவி]

திக்கெட்டும் திக்விஜயம் செய்த வீரன்! அஞ்சா நெஞ்சன்! ரோமாபுரித்தலைவன்! ஜூலியஸ் சீசர் திரும்பி வருகின்றான் பல வெற்றிகளுடன் தனது வெற்றிபுரி நோக்கி. அவன் பெற்ற விருதுகளுக்கோ விளக்கம் தேவையில்லை. அவனைப்பற்றி—அவனது வெற்றிகளைப் பற்றிப்பரணி பாடாத பாடகரே இல்லை. அவன் வெற்றி பல பெற்றானே என்பதற்காக அவனைச் சுற்றிப் பலபேர் பூஜை செய்யும் நிலையில் இல்லை. ஏன்? பூஜை செய்து வரங் கேட்டால் ஏதாவது "வரப்பிரசாதம்" கிடைக்காதா என்ற நிலையில் இல்லை அவர்கள். அவர்கள் வேண்டியது நேர்மை! கனவில் கவிகள் கண்டது காட்டு ஆட்சி முறையல்ல! நாட்டு ஆட்சி முறை! "பூஜா உணர்ச்சி" கூடாது என்ற நிலையில் உள்ளவர்கள். அப்படி நினைத்தது முதன் முதலில் (Brutus) புருட்டஸ் ஒருவன்தான். தலைவன் தவறான பாதையிலே செல்கிறானே என்பதற்காக மனங் கலங்கத்தான் செய்தான், சீசருக்கு நகக்கண் போல இருந்த புருட்டஸ். வெற்றி பல பெற்றானே, அவனா இந்த வெறி பிடித்த செயலைச் செய்வது என்று வேதனையடையத்தான் செய்தான். உள்ளத்திலே கீறல் ஏற்பட்ட நிலையில் சீசரை வெறுத்தனர் பல பேர்-பல வகையில். அந்த வகையில் காஷியஸ் ஒருவன். அவன் தன்நோக்கத்தை நிறைவேற்றிக்கொள்ளப் புருட்டசைத் தன் வலையில் விழச் செய்து, சிசரையும் விழச் செய்தான். விழச் செய்த முறை தவறே தவிர, அவன் விழுந்தது நாட்டின் நல்ல நிலைக்குத்தான். சீசரின் தலைமை போகவேண்டும் என்று அவன் நினைத்தது நண்பனை விட நாடே பெரிது என்று நினைத்ததினால்தான். தன்னலமற்ற ஒரு புருட்டசே தன் நண்பனின் போக்குக்கண்டு வெகுண்டான் என்றால் அந்தத் தலைவனின் தவறான பாதை எந்த முறையில் அமைந்திருக்க வேண்டும் என்று வரலாறு தெரிந்த மாணவர்களே அறிந்து கொள்ளக்கூடும். நாடு பெரிதா? நட்புப்பெரிதா? என்றுநெடுநாள் சிந்தித்த பிறகே அவன் "அந்த முடிவுக்கு" வந்தான். பயங்கரமான முடிவு தான்! தலை உருளும் படலம் அல்லவா? "நீயுமா புருட்டஸ்" என்று கதறித்தான் மண் மீது சாய்ந்தான் மாவீரன் ஜூலியஸ் சீசர்! நண்பன் நல்லபாம்பாக மாறிவிட்டதைக் கண்டு மருண்டுதான் அவன் தலை உருண்டது. போனது சிசரின் தலைமை மட்டுமல்ல! தலையே போய்விட்டது.

இரத்தப் புரட்சிக் காலமல்லவா? இன்று போல் அன்று கருத்துப் புரட்சிக் காலமாக இருந்தால் தானே!

கறை பட்ட கரத்துடனே புருட்டஸ் மக்கள் மன்றத்தின் முன் விளக்குகின்றான் தன் நண்பனின் தலை கீழே உருளவேண்டிய நிலைபற்றி. "My honour to his valour, and my sword to his ambition" என்கிறான் புருட்டஸ்.

"எனது நண்பனின் உழைப்புக்கு எனது நன்றி; ஆனால் அவனால் நாட்டுக்கு ஏற்படவிருந்த கேட்டுக்கு அரணாக நான் அவனுக்கு கொடுத்தது சாவு" என்னும் கருத்துப்படக் கூறுகிறான்.

அவனுக்குப் பிறகு அந்தோனி (Antony) எனும் சொற்செல்வன் ஆயிரம் காரணம் காட்டி ஆர்ப்பரித்தான்—இல்லை—சொற்போர் புரிந்தான். சிசரின் சவக்குழி அருகே நின்றுகொண்டே, "நான் சிசரின் பிணத்திற்காக அழவில்லை. அவன் நாட்டுக்கு விட்டுச்சென்ற பணத்திற்காக—அவன் மக்களுக்கு ஏற்படுத்திவிட்டுச் சென்ற ஒரு ஏற்பாட்டுக்காக (Will) நான் ஏங்குகின்றேன். அவன் உங்களுக்காக எழுதி வைத்துப்போன ஏற்பாடு என்ன தெரியுமா?" என்று நெஞ்சு உருக வாதாடினான். "ஏற்பாடு என்ன தெரியுமா?" என்று கேட்ட உடனே, மதிநிறைந்த மக்கள் அந்த ஏற்பாட்டை (Will) சற்றுக் காட்டுமே என்று கேட்டிருந்தால்......! ஆம், அவர்கள் கேட்கத்தான் செய்தனர். ஆனால் அது அந்தோனியின் வீராவேசச் சொற்களால் மறைக்கப்பட்டுவிட்டது. அவன் ஆட்டுமந்தை போல உள்ள மக்களை மரக்கட்டைகளாக ஆக்கவும், வேண்டுமானால் மின்சாரக் கம்பிகளாக்கவும், கற்றிருந்தான் (Mass Psychology) மக்களின் மனப் பண்பு என்னும் துறையை. ஆனால் மதிநிறைந்த மக்கள் உள்ள இக்காலத்திலே, "ஆர்பாட்டக்காரனே, எங்கே உன் தலைவனின் ஏற்பாடு?" என்று கேட்கத்தான் செய்வர். பிறகு நாடகத்தின் திசை மாறிவிடுமல்லவா?

சிசரின் தலைமையை வீழ்த்தும் பணியில் அவனுடைய தலையையே வீழ்த்தியது அக்கிரமந்தான். பரிதாபகரமான வரலாறுதான். காலத்தின் நிலை அப்படிச் செய்துவிட்டது. தற்பொழுதுள்ள கருத்துப் புரட்சிக்காலமா அக்காலம்? தற்காலத்திலே தலைவரை நீக்கவேண்டுமென்றால் அவருடைய தலைமையைத்தான் நீக்குவர். தீட்டவேண்டியது புத்தியைத்தானே. இக்காலசீசர்களுக்குப்புருட்டஸ்கள் கூடத் தேவையில்லை. அவரவர்களுடையமனச்சாட்சியே அவரவர்களுக்கு புருட்டஸ். தலைவன் தவறான பாதையிலே சென்றால் நீக்கப்படவேண்டியது தலைமையைத்தான் (Political death) இது 20-ம் நூற்றாண்டு, ஷேக்ஸ்பியர் நாடகம்—நாடகமல்ல—நாட்டு நடப்பு.

ரோமாபுரி சரிந்தது "ரோமாபுரி ராணிகளால்" பகுத்தறிவுப்புரி சரிகிறது மணியம்மையால். சரிகிறதே

என்று சஞ்சலமடையவில்லை. பகுத்தறிவுப்புரி சரியும்போது அதைத் தாங்குவதற்கு "மரத்துண்டுகள்" இருக்கத்தான் செய்கின்றன என்பதைக் கண்டு சற்று ஆறுதலடைகின்றோம். ஏன்—போர்க்களத்திலே நிற்கும் நாம் மீண்டும் போர்புரிய! பல நாட்களாக இந்த "மரத்துண்டுகள்" என் வீணாகக் கிடக்கின்றன என்று கூறுகின்ற நிலை மாறுகிறது. கோட்டைச் சுவர் இடிய நேரிடும்போது தானே வீணே கிடக்கிறது என்று கருதிய "மரத்துண்டுகளின்" மதிப்பை அறிய நேரிடுகிறது. முப்பது ஆண்டுகளாக எலும்புத்துண்டுகளைக் கற்களாகவும், தசையையும் இரத்தத்தையும் சேறாகவும் கொண்டு கட்டப்பட்ட கோட்டையாயிற்றே! அது சரியும்போது அதில் நாம் வசிக்க முடியுமா என்று சஞ்சலப்படலாமா? வசிக்க முடியும் "மரத்துண்டுகளை" முட்டுக் கொடுத்தால். "எங்கோ கிடந்ததுகள்" என்று நம்பிக்கையற்ற முறையிலே கூறினால் கோட்டையின் நிலை என்ன ஆவது? மேலும் காரம் மிகுந்த அறையிலே நெடுநாளாக வசித்து வந்திருக்கிறோம். நெடியோ நெடு நாளாக இருந்து வருகிறது. ஆனால் அந்த அறையை விட்டு நமக்கு வெளியேறவோ வகையில்லை. ஆனால் எண்ணமுண்டு. காரணம் நமது "பூஜா உணர்ச்சி" பூர்வீக சொத்து ஆயிற்றே என்ற ஏக்கம்! அந்த ஏக்கம் முதன் முதலில் நமது உள்ளத்தை விட்டு வெளியேறினால்தான் ஆக்கமும் ஊக்கமும் வெளிக்கிளம்ப முடியும்.

கோட்டையோ சரிகிறது. நிற்பதோ போர்க்களத்தில். நெருக்கடியான கட்டத்தில். கோட்டை சரிகிறதே என்பதற்காக நாம் செய்யவேண்டியது ஓட்டமல்ல. "வீணுக்குழைத்தோமடா விபரீதமாச்சுதடா" என்ற பாடலைக் கூட நாம் பாடவேண்டியதில்லை. கோட்டை சரிந்து விழுந்துவிடுமோ என்று நாம் ஓடுகிறோம்—இல்லை—விரட்டப்படுகிறோம். ஓடவேண்டிய அவசியமேயில்லை. நாம்தான் ஏன் ஓடவேண்டும்? கோட்டை நாட்டுக்குடையது, தனிப்பட்டவரின் கோட்டையல்ல. சரியும் கோட்டையைத் தாங்க "மரத்துண்டுகள்" இருக்கவே இருக்கின்றன—தூய உள்ளங்கள்!

தங்கச் சுரங்கத்திலிருந்து தங்கம் கலந்த மண்ணை (Ore) மிகப்பாடுபட்டு எடுத்துத் தந்த பாட்டாளியைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பாராட்டியும் விட்டது நமது நாடு. இந்த நன்றியை என்றும் நாடு மறவாது. ஆனால் பாடுபட்டு எடுத்து வந்த அந்தத் தங்கம் கலந்த மண்ணைக் கடலிலே கொட்ட நேருவதைப் பார்க்கும்போது.....................நினைத்தாலே நெஞ்சம் பதறுகிறது—அதையும் மறைக்க முடியாது. உள்ளம் உடைகிறது. கீறல்—சிறு வெடிப்பு—உள்ளம் உடையும் கட்டம்—இந்த மூன்றாவது நிலையை உண்டாக்கிக் கொள்ள விரும்பவில்லை ஆகவேதான் நாமும் தேற்றிக்கொண்டோம் பலவழிகளில். தளர்ந்தகட்டுக்குத் தண்ணீர் விட்டுந்தான் பார்த்தோம். அறுந்த கயிறுக்குப் புது முறுக்கு ஏற்றியும் பார்த்தோம். தேய்ந்துகொண்டே போன எழுதுகோலைச் சீவிச்சீவித்தான் பார்த்தோம். பலன் கண்டோமில்லை. இந்த முறை நெடுநாள் நீடிக்கவில்லை (Temperory satisfaction)

கலம் அமைத்தவனை கலத்தைச் செலுத்தவேண்டும் என்பது நியதியல்ல. அந்த வேலையை அவனிடம் கொடுப்பதே தவறு. நமக்கு வேண்டியது கொள்கை, கட்சிப் பிரதி கட்சியல்ல. கட்சியின் பாதையிலே கண்மூடிக்கொண்டு போக நாம் தயாராக இல்லை. ஆகவேதான் "லேபில் வேண்டாம்" என்று கூறுகிறோம். இன்று அல்ல. அன்றே கூறிவிட்டோம், ஜயப்பிரகாஷ் கண்ணீரைத் துடைக்கும் நேரத்தில்! ஒரு கட்சியிலே கட்டுப்பாடு இருக்க வேண்டுமானால் "பூஜா உணர்ச்சி" குறையவேண்டும் என்று இன்று நேற்றல்ல ஈராண்டுகளுக்கு முன்னமேயே கூறிவிட்டோம்.

இப்பொழுதுள்ள பிரச்சினை நாடகக் கம்பெனியின் உரிமை யாருக்கு என்பதல்ல! நாடகம் நடத்தப்படவேண்டும் நாட்டிலே. நம்பிக்கையான நடிகர்கள் கிடையாது கம்பெனியிலே என்பதினால் நாடக கம்பெனி முதலாளியே அந்த நாடகத்திலுள்ள எல்லா "பாத்திரங்களையும்" தானே நடித்துவிட முடியாது. தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினை நாடகம் நடத்தப்பட வேண்டும், நாட்டிலே நல்லதோர் கருத்துப் புரட்சியை உண்டாக்க, என்பதே! அந்தக் கம்பெனி தனிப்பட்ட முதலாளியுடையது அல்ல. அதில் நடிக்கின்ற நடிகத் தொழிலாளருடையது அந்தக் கம்பெனி. இங்கு முதலாளி (Materialism) பேசிப் பயனில்லை. காலம் மாறுகிறதல்லவா?

அமெரிக்கா கண்டம் கண்டுபிடிக்கப்பட்டது யாரால் என்பதல்லக் கேள்வி, பெர்ணாண்டோவால் கொலம்பஸ் முன்னேறினா, கொலம்பஸால் பெர்ணாண்டோ முன்னேறினா என்பதுமல்ல இப்பொழுதுள்ள பிரச்சினை. இரண்டு பேராலும் உலகம் கண்டது என்ன என்பதே பிரச்சினை—பிரச்சினையல்ல—முடிவு. இந்த இரும்பு போன்ற பாரத்தை நீக்க, "இரும்பாரம்" தீட்டப்பட்டது, "இம்சைக்கு இலக்கான இலட்சியவாதிகளின்" இதயத்துக்கு ஓர் மருந்தாக.

உண்மையாகவே, லேபில் வேண்டாம்—உள்ளம் உடையுமுன்—ரங்கதுரை — மரத்துண்டு—இரும்பாரம்—இவைகள் கட்டுரைகள் அல்ல—உள்ளம் உடையுமுன் சிந்திய கண்ணீர்த்துளிகள். இந்தக் கண்ணீரை ஈராண்டுகளுக்கு முன்னிருந்தே கண்டோம், "நிலையும் நினைவும்" என்ற நீரோடையின் வழியாக. ஆம் அந்தப்பேனா சிந்தியது மையல்ல! கண்ணீர்! உளநூல் அறிந்த மாணவி என்ற முறையில் இதை உணர நேர்ந்ததால் உள்ளம் வெதும்பிற்று அன்று.

இனிமேல் உள்ளம் வெதும்பிப் பயனில்லை. புதுக்கட்டு, புதுக்கயிறு, புதுஎழுதுகோல் தயார் செய்யவேண்டியதுதான்போலும்! துருப்பிடித்த வாளைக்கொண்டு போர்க்களத்தில் போராடுவதில் பயனில்லை. காலமோ, சிறிது நெருக்கடியான கட்டம். களத்திலே நாம், சீனா முழுச் சிவப்பேறிவிட்டது. பர்மாவோ பயமுறுத்துகிறது. டெல்லிதர்பாரோ தடுமாறுகிறது. நாம் இதுகாறும் சமுதாயமுனையிலேமட்டும் போராடி வந்திருக்கிறோம். இனிமேல் அந்த நிலை மாறவேண்டும். போகவேண்டியது பொருளாதார அரசியல் முனைகளில். சமுதாயம்—பொருளாதாரம் — அரசியல் — என்ற முக்கூட்டுக்கோணத்தை உடைத்தெறிய நல்லதோர் திட்டம் தேவை. "எதையும் தாங்க இந்த இதயம் உண்டு" என்றுகூறப் பெண்கள் தேவை! பரணிபாட அல்ல — போர் செய்ய.

ஆம்! நாம் பாடுபடவேண்டியது மூன்று முனைகளி

லும்! காரணம் மூன்று முனைகளும் ஒன்றை ஒன்று பின்னிக்கிடப்பதால்! அரசியலையும், வாழ்க்கையையும் என்று ஒன்றாகக் கருதுகிறோமோ அன்றே நாம் அரசியலை நடத்த முடியும். நம்முடைய "ஜீவசக்தி" பொதுவாழ்வும் தன் வாழ்வும் ஒரு இடத்தில்தான் இருக்கிறது—இருக்கமுடியும்—இருக்கவேண்டும் என்று கூறியதினால்தான் இன்றைய நிலையில் எங்களைப்போன்ற வீராங்கனைகளும் வீரர்களும் இயக்கத்திலே பங்கெடுத்துக் கொண்டு "இம்சைக்கு இலக்கான இலட்சியவாதி"களாக இருந்துவந்தோம். அந்தத்தொடர்பு இப்பொழுது சற்றுக்கலக்கத்தைக்கொடுத்தாலும் ஆறுதல் அடைகிறோம்; செயல் முறையிலே புதுமுறுக்குடன் இனி நாம் காட்டமுடியும் என்ற துணிவு இருப்பதால்.

தங்கச் சுரங்கத்திலிந்து மண்ணை எடுத்துக் கோடுத்த அந்தத் தள்ளாத டாட்டாளியைத் தவிக்க விடுவதா, என்று நாமும் தவித்துப் பயனில்லை. அந்த தங்கம் கலந்த மண் கடலிலே கொட்டப்படும்போது நாம் அந்தப்போக்கை—தடுமாற்றத்தை — தடுக்காமல் இருக்க முடியவில்லை. தான் பெற்ற பிள்ளை தானே என்று தண்ணீரில் எறிந்துவிட முடியுமா ஒரு தாய் தனது பிள்ளையை. தள்ளாத வயதில், தடுமாற்றத்துடன் அந்தத் தங்கங்கலந்த மண் "தரங்கத்திடையே" கொட்டப்படுகிறது. அதை நாம் தடுத்தே ஆகவேண்டும். அந்தக் கலப்புமண் நெடுநாள் உழைத்து எடுத்த மண்! கவனமிருக்கட்டும்.

❀

இலட்சியத்திற்கு இழுக்கு

பலகட்சிப் பிரமுகர்களும், முக்கியஸ்தர்களும், பல ஆயிரக்கணக்கான தொண்டர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்கப் பெரியார் தம் திருமண காரியத்தைக் கட்சி நலன் கருதி கைவிடுவார் என்று எதிர்பார்த்தேன்.

ஆனால் அதற்கு மாறாகத் திருமணம் 9-7-49-ல் நடைபெற்று விட்டது என்ற செய்திகேட்டு அதிர்ச்சியுற்றேன். பெரியாரின் திருமணம் கட்சிக் கொள்கைக்கும் இயக்க இலட்சியத்திற்கும் இழுக்கு உண்டாக்கும் என்று கருதுவதால் அவரின் தலைமையின் மீது நம்பிக்கை அற்றவனாக இருப்பதுடன், இனி அவர் தலைமையில் பணியாற்ற முடியாதவனாக இருக்கிறேன் என்பதை மிக வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கு. பராங்குசம்

தி. க. மாகாண நிர்வாக்கமிட்டி உறுப்பினர்.

கொள்கை காற்றில் பறக்கக்கூடாது

பெரியார்—மணியம்மை திருமண நிகழ்ச்சி கழகத்தையே குலைத்துவிடுமோ என்று அஞ்சிய எண்ணற்ற கழக ஊழியர்களுக்கு உங்கள் அறிக்கை வழிவகை காட்டுகிறது. ஒவ்வொரு திராவிடர்கழகத் தொண்டனும் கட்சி பாழ்படுவதையோ, கொள்கையைக் காற்றில் பறக்கவிடுவதையோ விரும்பவே இல்லை, தன்னைப் போன்ற எண்ணற்ற தொண்டர்களின் உழைப்பினால் உருவாகி மிகுந்த வலிமைவாய்ந்து விளங்கும் கழகம் அழிந்துபடுவதையும் அவன் விரும்பவில்லை. எனவே இயக்கத்தைத் தொடர்ந்து நடத்துவதே அனைவருடைய எண்ணமுமாகும். கட்சியைக் கட்டிக்காக்கும் பொறுப்பு நமக்கு வந்து சேர்கிறது என்பதைக் கூறவேண்டியதில்லை. ஏறக்குறைய இரண்டு லட்சம் உறுப்பினர்கள் திராவிடர் கழகத்தை நம்பியிருக்கிறார்கள். அவர்களைக் கொண்டுசெலுத்தும் பொறுப்பு நமது கடமையென்றும் அவர்கள் எண்ணுகிறார்கள்.

முருகு. சுப்பிரமணியன்,

தி. க. மாகாண நிர்வாகக்கமிட்டி உறுப்பினர்

ஆசிரியர், "பொன்னி"

இனி தலைவராகார்

பெரியாரின் திருமணத்தைப்பற்றிக் கோடிக்கணக்கான தோழர்கள் கண்கலங்கி இருக்கிறார்கள். கல்யாணமும் நடந்து விட்டது. இனி அவரை நமது தலைவராக இருத்துவது நமது திராவிட நாட்டிற்குப் பெரிய அவமானம். ஆகையால் பொதுக்கூட்டம் நடத்தி அடுத்த தலைவர் பதவிக்கு ஒருவரைத் தேர்ந்தெடுக்க முயற்சி செய்ய வேண்டுகிறேன். இதுவே எனது அன்பார்ந்த வேண்டுகோள்.

ஏ. கிருஷ்ணபிள்ளை

தி. க. மாகாண நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்.

திருவனந்தபுரம்.

கண்ணீர்த்துளிகள்

16-ம் பக்கத் தொடர்ச்சி.

கண்டனம் தெரிவித்துள்ள கழகங்கள்:—தி. க. மடத்தூர், தி. க. பட்டணம், தி. க. நுங்கம்பாக்கம், தி. க. புதியம்புதூர், தி. க. முத்துப் பேட்டை; பெரியார் வாலிபர் சங்கம் காஞ்சாபுரம், திராவிட வாலிபர் கழகம் ஏகாம்பர குப்பம், திருவள்ளுவர் கழகம் பொன்னேரி, தமிழ்க்கலை இளைஞர் கழகம் அய்யன்பேட்டை (காஞ்சி), திராவிட இளைஞர் கழகம் திட்டக்குடி, கலைச் சங்கம் வீரவநல்லூர், தோழர் மன்றம் சென்னை, தாளமுத்து நடராசன் இளைஞர் கழகம்மதுரை, பெ. சு. வ. ஞாபகார்த்த சமதர்மத் திராவிட இளைஞர் வாசக சாலை தூத்துக்குடி.

குறிப்பு:— மேலும் வந்து குவிந்துகொண்டிருக்கும் கண்டனத் தீர்மானங்களும், கழகப் பணிகளிலிருந்து விலகி நிற்கும் தோழர்களின் பட்டியலும் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

—

"மாலை மணி"

"மாலைமணி" என்ற பெயருடன் திராவிடர் தமிழ்த் தினசரிப்பத்திரிகை ஒன்று சென்னையில் இருந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. முழு விபரமும் அடுத்த இதழில் வெளியிடப்படும்.

திராவிடநாடு

ஞாயிறு] 24—7—49 [காஞ்சி

நிறைவெறித் தாண்டவம்

விலங்குகளோடு பழகி அவற்றின் நட்பினைப் பெற விரும்பும் மனிதன், தன் இனத்தைச் சேர்ந்த மற்றொரு மனிதனைக் கண்டால், அவன் மற்றொரு மனிதன் என்ற ஒரே காரணத்திற்காக அவனை வெறுத்தொதுக்கும் விபரீத நிலை, காட்டுமிராண்டிகள் வாழும் காடுகளிலல்ல—நாகரிகம் மிகுந்த நாடுகளிலேயே இவ்விருபதாம் நூற்றாண்டிலும் இருக்கக் காண்கிறோம். மனித சமுதாயமே வெட்கித் தலை குனியவேண்டிய இழிந்த செயல், என்றாலும், இன்னும் இருந்து வருகிறது.

மனிதனை மனிதன் வெறுக்கும் இவ்விழிந்த செயல் மிகுதியான அளவுக்கு நிறவெறித் தன்மையால் கையாளப்படுகிறது. இந்நிறவெறி அமெரிக்கா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இன்னும் களி நடம் புரிந்து வருகிறது. அங்கெல்லாம் வெள்ளையன் கறுப்பனை வெறுக்கிறான்—கருப்பன் என்ற ஒரே காரணத்திற்காக.

19-7-49ல் லண்டனில் நிறவெறி தன்முழு ஆற்றல் கொண்டு தாண்டவம் புரிந்திருக்கிறது. சுமார் 1000 வெள்ளையர்கள் நீக்ரோ தொழிலாளர் ஹோட்டல் ஒன்றினை வெறிபிடித்துத் தாக்கியிருக்கிறார்கள். வெள்ளையர்—கறுப்பர் போராட்டம் 3 மணி நேரத்திற்கு மேல் நடைபெற்றதாம். மொத்தம் ஐந்து பேருக்குக் காயம். 17 வெள்ளையர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆங்கில நாட்டிலேயே நிறவெறிக் கொடுமை இந்த அளவுக்குச் சென்றிருக்கிறதென்றால் மற்றப்பிற்போக்கு நாடுகளின் நிலைமை என்னவாகும்! இத்தகைய நிறவெறிச் செயல்கள் முதலில் முறியடிக்கப்பட்டால்தான் உலகில் அமைதியும், ஒழுங்கும் நிலவ வழியேற்படமுடியும் என்பதை ஐ. நா. சபை உடனடியாக உணர்ந்து ஆவன செய்ய முற்பட வேண்டும்.

பழங்குடி மக்கள் என்ற காரணத்திற்காகவே, இந்நாட்டில் உழைக்கும் கூட்டத்தினர் உயர்வகுப்பு மக்களால் தாழ்த்தப்பட்டுக் கொடுமைகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். தாழ்த்தப்பட்டோரிடையே விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருவதன் காரணமாக நிறவெறியை ஒத்துவிளங்கும் சாதி வெறி இங்கு நாளுக்கு நாள் மங்கி மறைந்து வருகிறது.

அண்மையில் ரஷ்யா சென்று திரும்பிய பால் ராப்சன் என்ற நீக்ரோ நடிகர், ரஷ்யாவில் கறுப்பர்கள் எவ்வளவு சமமாக நடத்தப்படுகிறார்கள் என்பதையும், அதே சமயத்தில் அமெரிக்காவில் அவர்கள் எவ்வளவு குரோதத்தோடு நடத்தப்படுகிறார்கள் என்பதையும் விளக்கி, ரஷ்யாவில் தனக்கு அளிக்கப்பட்ட வரவேற்பைப் பற்றி விரித்துக் கூறியிருப்பதைப் பலரும் அறிந்திருக்கக்கூடும். ரஷ்யாவில் தோழமை யுணர்ச்சி அந்த வகையில் பாராட்டப் படுவதால்தான் மனிதப் பண்பு அங்கு நிலவ வழியேற்படுகிறது.

ரஷ்யாவில் நிலவிவரும் அந்தத் தோழமையுணர்ச்சி, உலகெங்கும் நிலவும் நிலை ஏற்பட்டால் நிறவெறித் தாண்டவம் தானே அடங்கி ஒடுங்கிவிடும் என்பது பால்ராப்சன் கூற்றிலிருந்து அறியக் கிடக்கிறது. எனவே நிறவெறித் தாண்டவம் ஒழியத் தோழமையுணர்ச்சி எங்கும் மலர்ந்து மகிழ்ச்சி யூட்டுவதாக!

பெரியாரின் போக்கைக் கண்டித்தும், அவர் மீது நம்பிக்கையில்லை என்று தெரிவித்தும், இதுவரையில் நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் கூட்டிக் கண்டனத் தீர்மானங்கள் அனுப்பிவைத்துள்ள கழகங்கள்:—

88

கண்டனத் தீர்மானங்கள் அனுப்பியுள்ள கழகச் சார்புடைய வேறுபல கழகங்கள்.

45

தங்கள் கண்டனத்தை எழுத்துமூலம் இதுவரையில் நமக்குத் தெரிவித்துள்ள மத்திய நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள்.

26

குறிப்பு:—பெரியாரின் போக்கைக் கண்டித்து ஆயிரக் கணக்கான கழகத் தோழர்கள் தம் கருத்தை நமக்கு அறிவித்து வருகிறார்கள். திராவிடர் கழகத்தின் உடலுறுப்புகளாக விளங்கும் கழகங்களும் தம் எண்ணத்தைத் தீர்மானத்தின் மூலம் அறிவித்து வருகின்றன. இந்தத் தீர்மானங்களே கழகத்தின் பொதுக்கருத்தை உணர்த்துவனவாகும். ஆகவே பொதுக்கருத்தை உணர அவைகளின் தொகை பெரிதும் வேண்டப்படுவதாகும். அவற்றின் அளவை மேலும் அறிந்துதான், கூடிக் கலந்து பேசவேண்டியிருக்கிறது. அதுதான் முறை.

திராவிட நாடு வழக்கு நிதிக்கு

"ஓர் இரவு"

கே. ஆர். ஆர். நாடக சபை

ரூ. 1150 வசூல் நன்கொடை

"திராவிடநாடு" வழக்கு நிதிக்கென, கே. ஆர். இராமசாமியின் கிருஷ்ணன் நாடகசபையினரால், கோவை எடிசன் தியேட்டரில், 18—7—49 திங்கட்கிழமை இரவு "ஓர் இரவு" நாடகம் மிகச்சிறப்பாக நடத்திக் காட்டப்பட்டது.

நாடகத்திற்கு வசூலாகும் தொகையை "திராவிடநாடு" வழக்கு நிதிக்கு நன்கொடையாகக் கொடுப்பதென்ற முடிவின்பேரிலேயே, அறிக்கைகள்மூலம் நாடகம்நடைபெறுவது விளம்பரப்படுத்தப்பட்டிருந்தது. அப்படியேஅன்று வசூலானதொகையில் வரிபோக மீதமும், தனியே சிறிதளவாகக் கொடுக்கப்பட்ட நன்கொடையும் சேர்த்து ரூ. 1150. வழக்கு நிதிக்கு உதவப்பட்டது.

நாடகம் இரவு 10-மணிக்குத் துவக்கப்பட்டது. அன்று நடைபெற்ற "ஓர் இரவு" நாடகத்தைச் சிறப்புறச் செய்த நடிகர்கள் கே.ஆர். இராமசாமி, ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, நடேசன், எம். என். கிருஷ்ணன், தட்சிணாமூர்த்தி, மகாலிங்கம், மணி முதலியோராவார்கள்.

நாடகத்தின் இறுதிக் கட்டத்தில் நாடகக்குழுவின் உரிமையாளர் நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி, நாடகத்தைப்பற்றியும், நாடகத்திற்கான காரணத்தைப்பற்றியும், விளக்கிக்கூறும்படியாகத் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களை அழைத்தார்கள்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் பேசியதன் சுருக்கம் வருமாறு:—

"திராவிடநாடு" வழக்கு நிதிக்கென, இன்று "ஓர் இரவு" நாடகம் நடத்திக்காட்டப்படுகிறது. நாடகத்தை நீங்கள் கண்டு களித்தது போலவே நானும் கண்டுகளித்தேன். நாடகச்சிறப்பியல்புகளைப்பற்றி எடுத்துக்கூறுவதற்கு முன்பு, நாடகம் இன்று நடைபெறுவதற்கான காரணத்தை முதலில் சற்று விளக்க விரும்புகிறேன்.

"திராவிட நாடு" இதழ் மீது, சென்னை அரசியலார் அடக்குமுறைப் பாணத்தை அவிழ்த்துவிட்டு, அதனை ரூ. 3000 ஜாமீன் தொகையாகக் கட்டும்படி வற்புறுத்தினார்கள் என்பதையும், அதன்படியே ரூ. 3000 கட்டப்பட்டது என்பதையும் நீங்கள் அறிவீர்கள் "திராவிட நாடு" இதழ் மீது, சர்க்கார் சாட்டியிருக்கும் குற்றச்சாட்டு நேர்மையானதாகாது—நீதிக்கு ஏற்றதாகாது என்பதை வழக்கு மன்றத்தில் எடுத்துக்கூறி வாதாடிப் பார்ப்பது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அந்த முடிவை ஆதரித்துப் பலரும் தங்களாலான உதவியினைப் புரிந்து வருகிறார்கள். அதன்படி, "திராவிட நாடு" இதழிடம் நீங்காப் பற்றும், அதன் வளர்ச்சியில் மிக்க அக்கறையுங் கொண்டு விளங்கும் தோழர் கே. ஆர். இராமசாமியும், மற்றும் இக்கம்பெனியிலுள்ள பல நடிகர்களும் இந்நாடகத்தின் மூலம் தங்களாலான உதவியைச் செய்ய முன்வந்துள்ளார்கள். யாரும் அவர்களை உதவும்படி கேட்டுக்கொள்ளவில்லை. அவர்களாகவே உதவி செய்ய வலிய முன் வந்துள்ளார்கள். இது அவர்கள் ஆர்வத்தின் மிகுதியைக் காட்டுகிறது. அந்தஅளவுக்குத் "திராவிட நாட்டி"டம்அவர்கள் நீங்காப் பற்றுக் கொண்டுள்ளார்கள். அவர்களை மனமாரப் பாராட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன்; நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

எண்ண உரிமை—எழுத உரிமை—எடுத்துக் கூற உரிமை ஆகியவற்றை எங்கள் ஆட்சியிலே நாங்கள் அளிப்போம், என்று பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சிக் காலத்திலே எக்காளமிட்டு நின்ற காங்கிரஸ்காரர்கள், இன்று ஆட்சிப்பீடம் ஏறியவுடன் எதிர்க்கட்சியினரை எந்தவிதத்திலும் அழித்தொழித்துவிடுவது என்ற குறிக்கோளைக் கடைப்பிடித்துள்ளார்கள். எதேச்சாதிகாரப்பிரிட்டிஷ் ஆணவ ஆட்சிக் காலத்திலும் கண்டுபிடிக்கப்படாத பல அடக்குமுறைச் சட்டங்களை ஏற்படுத்திக் கொண்டுதான், இன்றைய 'காருண்ய மிகுந்த, காந்திய நெறியில் செல்லும்'—'அகிம்சையை' அடிப்படையாகக் கொண்ட' காங்கிரஸ் ஆளவந்தார்கள் ஆளத் தொடங்கியுள்ளார்கள்.

எதிர்க்கட்சியாக இருந்து வரும் திராவிடர் கழகக் கூட்டங்களுக்கு 144 தடை—கழகப் பேச்சாளர்கள் பேசக் கூடாது என்ற வாக்கறுப்புச் சட்டம்—கழக ஏடுகளில் எழுதக் கூடாது என்று ஜாமீன் தொகை கேட்கும் அடக்குமுறை. இவற்றின் நோக்கம் எப்படியேனும் திராவிடர் கழகத்தை ஒழித்து கட்டிவிட வேண்டும், என்பதல்லாதுவேறென்னவாக இருக்கமுடியும்?

உண்மைக்கும், நீதிக்கும் நேர்மைக்கும் மட்டுமே தன் பேனாவைப் பயன்படுத்தி வரும் 'திராவிட நாட்'டை ஒழித்துவிட, கொள்கையை நேர் நிறுத்திப்பார்க்க முடியாத காங்கிரஸ் அரசாங்கம், 'திராவிட நாட்'டின் பேனா முனையையே முறித்துவிடத்

திட்டமிட்டு ரூ. 3000 ஜாமீன் கேட்டுள்ளது. பணக் குண்டுகளை வீசிப் பேனாவின் முனையை முறித்து விடவே எண்ணி அடக்கு முறையை அது ஏவியுள்ளது.

எதற்காக ரூ.3000 ஜாமீன்தொகையாகக் கட்டவேண்டும் தெரியுமா? "திராவிடநாடு" வகுப்புத் துவேஷத்தைக்கிளப்பக்கூடிய முறையில் கட்டுரைகள் தீட்டியிருக்கிறதாம். எப்பொழுது? ஏறத்தாழ ஒரு ஆண்டு இரண்டு திங்களுக்கு முன்பு! ஒரு ஆண்டு இரண்டு திங்கள்களுக்குப் பிறகுதான் இந்த அரசாங்கத்திற்குப் புரிகிறது, "திராவிடநாடு" வகுப்புத் துவேஷக் கட்டுரைகளைத் தாங்கிக் கொண்டிருந்தது என்பது. அவை குற்றமுடையன என்று ஒருஆண்டு இரண்டு திங்கள்கள் கழித்துச்சொல்லும் அரசாங்கத்தை நாம் கேட்கிறோம், அந்தக் கட்டுரைகள் இன்னவிதமான வகுப்புத்துவேஷத்தைக் கிளப்பி, இன்ன விதமான நாசத்தை விளைவித்தன என்றுஎந்த ஆதாரத்தைக் காட்டியாவது நிரூபிக்க முடியுமா என்று?

திராவிடர்கழகக் கருத்துக்களைத் தாங்கிக் கொண்டு வருகின்றன என்ற ஓரே காரணத்திற்காக, 'திராவிடநாட்'டிற்கு ரூ. 3000 ஜாமீன், 'விடுதலை'க்கு ரூ. 10,000 ஜாமீன், குடிஅரசு'க்கு ரூ. 3000 ஜாமீன். காங்கிரஸ் ஏடாகிய 'தினசரி'யே கூறுகிறபடி இதுவரையில் எந்தப் பத்திரிகையிடத்தும் ஜாமீன் கேட்டறியாத தொகை ரூ. 10,000! வெள்ளைக்கார ஏகாதிபத்தியக் கொடியஆட்சியிலுங் கூட இந்தக் கொடுமைகள் நடந்தது கிடையாது.

இவ்வளவு கொடுமைகள் இழைக்கப்பட்டும் கழகம் வளர்ந்து வருகிறது. காரணம் இளைஞர்களிடத்தே காணப்படும் உள்ள உறுதியேயாகும். நமது உடைமைகள் பாழ்பட்டாலும், நமது உடல் பாழ்பட்டாலும், நமது உயிர் பாழ்பட்டாலும், நமது கொள்கைகள் என்றும் பாழ்படாதவைகள். பணம் பாதாளம் வரையிலும் செல்லும் என்பார்கள். ஈட்டி எட்டினமட்டும் பாயும் என்பார்கள். துப்பாக்கிக் குண்டு சக்தியுள்ளவரையில் பாயும். ஆனால் சுயமரியாதைக்காரனுடைய அறிவு அண்டபிண்ட சராசரங்களில் எங்கெங்கு கொடுமைகள் கொடூரங்கள் காணப்படுகின்றனவோ, அங்கெல்லாம் சென்று பாய்ந்து, அவற்றைக் களைந்தெறிய முற்படும் என்பதை இன்றைய அரசியலார் உணரட்டும்.

ஆகவேதான் இன்றைய அரசாங்கத்தாரால் கொள்கையோடு கொள்கையை எதிர்நிறுத்திப் பார்க்க இயலவில்லை என்கிறோம். அவர்கள் கொள்கை வலிவற்றவர்களாகி—எதிர்க்கட்சிஆட்களையும் சாதனங்களையும் அழித்து விட முற்பட்டுள்ளார்கள். ஒருவகையில் இதைக்கூட நாங்கள் வரவேற்கிறோம், காரணம், அப்பொழுதுதான் வீர இளைஞர்கள் உணர்ச்சிகொண்டு வீறிட்டெழுந்து செயலாற்ற, அவர்களுக்கு உள்ளக் கிளர்ச்சி ஏற்படும்.

திராவிடர்கழக இளைஞர்கள் ஏராளமாகக் கூடியிருக்கும் இங்கு இச்சந்தர்ப்பத்தில் ஒன்று கூற விரும்புகிறேன். கழகத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டிருப்பது குறித்துப் பல இளைஞர்கள் உள்ளம் உடைந்து காணப்படுகிறார்கள். கடமையிலே உறுதியிருக்கும் மட்டும் நமக்குக் கவலை வேண்டாம்.

கொள்கை நமக்குப் பெரிது. கொள்கைக்காகத்தான் கழகத்தில் சேர்ந்தோம். அந்தக் கொள்கைகாகத்தான் வாழ்கிறோம். அக்கொள்கைக்காகவே இனியும் வாழ்வோம். தனிப்பட்ட எந்தஆளுக்காகவும் நாம் கழகத்தில் சேரவில்லை. தனிப்பட்ட ஆள் தவறு செய்வாரேயானால், அதனால் அவர் கொள்கையைக் கடைப்பிடிக்க முடியாமல் வலிவிழந்தார் என்று ஏற்படுமேயொழிய, கொள்கை வலிவிழந்தது என்று ஏற்படாது. நமது அறிவியக்கக் கொள்கைகள் அவ்வளவு சாதாரணமானவையல்ல.

கட்சியில் தவறு செய்பவர் தலைவரேயானாலும், தளபதியேயானாலும் தொண்டனேயானாலும் அவர்கள் புறக்கணிக்கப்பட வேண்டியவர்களேயல்லாமல், கொள்கையல்ல. தலைவர் கட்சிக்கொள்கைக்கு மாறாகச் சிறிது தவறிழைப்பவராகக் காணப்பட்டாலும் அதனைக் கண்டிக்கும் மாண்பு நம்மிடத்துஉண்டு என்பதைக்காட்டி வருகிறோம். நமக்குத் தவறு என்றுபட்டு அதனின்றும் நம்மை நாம் காப்பற்றிக்கொள்ள முற்படும் போது, கட்சி ஒழிவதிலே கண்ணுங் கருத்துமாயுள்ள எதிர்க்கட்சித் தோழர்கள் பலர் தலைவரின் தவறைச் சரி எனச் சொல்லிச் சாதிக்க முற்படுகின்றனர். நமக்குத் தவறு என்று படும் ஒன்று காங்கிரஸ்காரர்களில் பலருக்குச் சரி என்றேதோன்றுகிறது. நமக்குச்சிறு தவறும் கொள்கையை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது பெரிதெனவேதான் தோற்றும். காங்கிரஸ்காரர் பலருக்கு இத்தகைய தவறுகள் பழக்கப்பட்டவைகள் போலும்! அதனால்தான் அவர்களுக்கு நமது தலைவர் இழைத்த தவறு தவறாகவே காணப்படவில்லை; சரியான செயலாகவே காணப்படுகிறது. தவறுகள் எவ்வளவாயினும், அவை எவ்வளவு பெரியவைகளாயினும் அவற்றைச் சீரணம் செய்துகொள்ளும் பண்பு காங்கிரஸ்காரர்களுக்கு உண்டு. அவ்வாறு தவறைச் சீரணம் செய்துகொள்ளும் பண்பு நமக்கு இல்லாத காரணத்தால்தான், தலைவர் இழைத்தாலும் தவறைத் தவறு என்றே சொல்கிறோம்

கொள்கைகளுக்கு வழிகாட்டிகளாக இருந்து, பின்பு வழுக்கி விழுந்தவர்களின் வரலாறு கண்டு நாம் அஞ்சத் தேவையில்லை—சஞ்சலப்பட வேண்டியதில்லை — கவலை கொள்ள அவசியமில்லை. கொள்கையைக் கடைசிவரையில் கடைப்பிடித்தொழுகி, கொள்கையிலே வெற்றி கண்டு, கொள்கைக்காகவே வாழ்ந்து வீழ்ந்த தலைவர்கள் வரலாறுகள் நமக்கு என்றென்றும் வழிகாட்டிகளாக இருக்கும். சாக்ரடீஸ், ஜியார்டோ புரூனோ, இங்கர்சால், ஆகியோர் வரலாறுகள் இருக்கின்றன. நமது இயக்கக் கருத்துக்களைக் கடைசிவரையில் கடைப்பிடித்து மறைந்த ம. சிங்காரவேலு, மாயவரம் நடராசன், நாகை மணி, அஞ்சா நெஞ்சன் அழகர்சாமி ஆகியோர் வரலாறுகள் நமக்கு வழிகாட்டிகளாக உள்ளன. எனவே கவலை வேண்டாம்; கடமையாற்றுவோம் களிப்புடன்.

கழகக் கொள்கைகளை நாட்டில் பரப்பும் நல்ல தொண்டை மேற்கொண்டிருக்கும் "திராவிட நாடு" வாழ, வளர, அதற்கு வழக்குநிதி அளிக்க முன்வந்த நாடகக் குழுவினரை மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(12-ம் பக்கம் பார்க்க)

கடவுள்—விஞ்ஞானம்

இலக்குமி

தற்காலத்தில் எங்கு நோக்கினும் விதவிதமான புதிய படைப்புகள் — வித விதமான வாழ்க்கை வசதிகள் - மனிதனின் உழைப்பைக் குறைத்து ஓய்வை அதிகப்படுத்தக்கூடிய புதிய புதிய இயந்திர சாதனங்கள் ஓய்வு நேரங்களில் இன்பம் நுகர, மகிழ்ச்சியடைந்திருக்க ஏற்ற உல்லாசக் கூடங்கள், இவை யாவற்றையும் திறம்பட, மிக்க அதிசயமாக அமையும் வகையில் அமைத்துத் தந்திருக்கிறது விஞ்ஞானம்.

இத்தகைய விஞ்ஞானத்தின் ஆதி நிலை மிகவும் போற்றத்தக்க விதத்திலேயே ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு சொல்லுக்கும், செயலுக்கும் காரணம் கற்பிக்குமாறு கேட்டது - ஏன்? எப்படி? எதற்காக? என்ற கேள்விகள் பழங்கால விஞ்ஞானிகளின் மனத்தில் தோன்ற, அவையே தற்கால விஞ்ஞானத்தின் பெரு வளர்ச்சிக்குப் பெருமைதரும் அடிப்படையாக அமைந்து நின்றன. கலீலியோ நியூட்டன், ஐன்ஸ்டைன் முதலான பெரும் பெரும் விஞ்ஞானிகளின் பெருமைக்கும், ஆற்றிய ஆற்றலுக்கும் பீடு தருவனவாக அமைந்து நின்றன இக்கேள்விகள்.

கடவுட் கொள்கைகளைப் பெரிதும் போற்றிப் பரப்பிவந்த புரோகிதர்கள் தீவிர மதவாதிகளாகக் கருதப்பட்டனர். இத்தகைய மதவாதிகள், விஞ்ஞானிகளின் போக்கைக் கண்டு மருண்டனர். எப்போதுமே சொல்லுக்கும் செயலுக்கும் காரணம் வேண்டி நின்ற விஞ்ஞானிகளை இடித்துக் கூறி பழி தூற்றினர். சமயம் நேரும்போது அவர்களைத் தூக்குமேடைக்கும் அனுப்பப் பின்வாங்கவில்லை. மதவாதிகள் விஞ்ஞானத்தை முளையிலேயே கிள்ளி யெறியக் கிளர்ந்தெழுந்தனர், விஞ்ஞானிகளின் போக்குக் கண்டு, மனம் பொறுமல்.

அக்கால அரசாங்கங்களிலே மதவாதிகளுக்குத் தீவிரமான பிரத்யேக சலுகைகள் காட்டப்பட்டுவந்தன. அதனால்தான் உலகம் உருண்டையென வாதாடிய கலீலியோவைச் சிறையிலடைத்துக் கொல்ல முற்பட்டனர். தமக்குக் கொடுக்கப்பட்ட சலுகைகளைத் தம் விருப்பப்படி பயன்படுத்திக் கொண்டனர். அரசாங்கத்தினரும் மதவாதிகளின் கைப்பொம்மைகளாகவே விளங்கினர்! சந்திர மண்டலத்தைத் தனது சிறிய தொலை நோக்கு ஆடி (Telescope) மூலம் காட்டிய விஞ்ஞானியை, கடவுட் கொள்கைகளை எதிர்த்து நிற்கும் ஒரு நாத்திகன் எனக் குற்றங் கூறி, அவ்வறிஞர் திலகத்தைச் சிறையிலடைத்துக் கொன்றனர் ரோம் நாட்டுக் குருக்கள்மார்கள்.

கலீலியோ மட்டுமல்ல, மதவாதிகளின் 'அன்புப் பார்வையால்' மாண்டது. பழமைப் பழக்க வழக்கத்தை மாற்றிய ஒவ்வொரு விஞ்ஞானியும் மதவாதிகளின் கூரிய நோக்கில் பொசுங்கினர்! இங்ஙனம் தம் மூடக் கடவுள் கொள்கைகளைப் பரப்ப, விஞ்ஞானிகளை, அதாவது எதற்கெடுத்தாலும் காரணம் கேட்டு நின்ற அறிஞர்களை அவ்வப்போது ஏதாவது செய்துகொன்று குவித்துக்கொண்டே இருந்தனர்.

ஆயினும் நடந்தது என்ன? விஞ்ஞானம் அடியோடு அழிந்தாவிட்டது? நஞ்சு இட்டால் பட்டுவிடும் மரம் என நினைத்தனர் ஒரு சாரார். ஆனால் மரமோ துளிர் விட்டுத் தளதளவென்று தழைத்தோங்கவாரம்பித்தது. ஆப்பிள் பழம் கீழே விழுந்தாலும் நமக்கென்ன என்று விஞ்ஞானி வீணே இருக்கவில்லை. அதற்கும் காரணம் என்ன என்பதைக் கண்டறியத் துடித்தான்.

அன்று நியூட்டன் கண்டுபிடித்த பூகவர்ச்சி சக்தியே இன்றைய விஞ்ஞானத்தின் ஒரு பெரும் பாகத்தை இடங்கொண்டிருக்கிறது எனக் கூறினால் அது மிகையாகாது. "சிறு துளி பெரு வெள்ளம்" என்பதே போல, விஞ்ஞானிகள் பலர், அவ்வப்போது கண்டுபிடித்த சிறு சிறு உண்மைகளின் தொகுதியே இன்றைய அணுகுண்டுக்கும், அணு ஆராய்ச்சிக்கும் ஆக்கம் அளித்தது எனக்கூறலாம். அமெரிக்காவின் அணுகுண்டு, ரஷ்யாவின் காஸ்மிக்குண்டு முதலியவை விஞ்ஞானத்தின் தற்காலத்திய பெருஞ்சாதனைகளாகும். சாதனைகள் தீங்கு பயப்பனவாகும் என்று பலரும் கருதலாம் அது பயன்படுத்துவோரின் பண்பைப் பொறுத்ததேயல்லாமல், விஞ்ஞானத்தின் குற்றமாகாது, சாதனையின் நன்மையைச் சிந்தித்தும்பார்க்கவேண்டும். மேலும் விஞ்ஞானத்தின் வழியாக மழையைப் பெறவும் ஆராய்ச்சிகள் நடத்தி வெற்றி பெற்றுக்கொண்டிருக்கின்றனர் விஞ்ஞானிகள்.

விஞ்ஞானம் தன்பால் வேறு பாகங்களாகிய இரசாயனம், பௌதிகம்போன்றவற்றினின்றும் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் செய்த-செய்துவரும் தொண்டுகள் மிகமிகப்போற்றத்தக்கனவாம்.

கடவுட்கொள்கை—விஞ்ஞான சாதனை இரண்டும் ஒன்றையொன்று மோதுகின்றன. ஒன்று மனிதனுடைய அறிவிக்கு அப்பாற்பட்டது. மற்றொன்று மனிதனின் அறிவுக்கு உட்பட்டது.

காத்தல், படைத்தல், அழித்தல், ஆகிய மூன்று குணங்களையும் உடையவராகச் சித்தரிக்கப்படுகின்றார் கடவுள். நம்நாட்டுக் காவியங்களிலேயும், கவிதைகளிலேயும் இம்மாதிரிக் கடவுளின்தன்மைகள் ஏராளமாக விதந்தோதப்படுகின்றன.

கடவுள் புரிவதாகக் கூறப்படும் மூன்று தொழில்களையும், நம்மால் நேரிடையாக அறியமுடிவதில்லையானம்

வாக்குக்காயம் ஆகிய மூன்றிற்கும் அப்பாற்பட்டவைகள் அவைகள் என்று சொல்லப்படுகின்ற காரணத்தால். மதவாதிகள் அப்படி ஊகிக்கிறார்கள்; ஊகித்ததை நம்மிடம் சொல்லி நம்மை நம்பவேண்டுமென்றுவற்புறுத்துகின்றனர். திட்டவட்டமாக இவைகள்தான் என்று கடவுளின் தொழில்களை எந்த மதவாதியாலும் வரையறுத்துக்கூறமுடியவில்லை. மதவாதிக்கு மதவாதி கருத்து வேறுபாடு அடைந்துகொண்டேபோகிறது. கடவுளின் மூன்றுதொழில்களையும் சொல்லக் கேட்கிறோமேயொழிய, காட்டித் தெரிந்துகொள்ளமுடியாத நிலையில் அவைகள் ஐயப்பாட்டிற்குள்ளானதாகவே இருக்கின்றன. ஆனால் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று பண்புகளும் விஞ்ஞானத்திடத்து இருக்கக்காண்கிறோம்.

விஞ்ஞானம் விதவிதமான பொருள்களைப் படைக்கிறது. மனிதனின் வாழ்க்கை வசதிகள் பலவற்றையும் உரியமுறையில் காப்பாற்றி வருகிறது. அழிக்கப்படவேண்டும் என்று கருதும் பலவற்றையும் அழிக்கிறது.

விஞ்ஞானம் புரியும் மூன்று தொழில்களும், மனிதனுடைய அறிவுக்கு உட்பட்டு, மனிதனின் தூண்டுதலின்பேரில், தூண்டுதல் செய்யும் அளவுக்குச் செயலாற்றலில் ஈடுபடுகின்றன. மனிதன் ஒருபொருளை படைக்கச்சொன்னால் விஞ்ஞானம் தன் சக்திக்கேற்றபடி படைக்கும், பாதுகாக்கும்படி கட்டளையிட்டால் தன் ஆற்றலுக்குத் தகுந்தபடி காப்பாற்றும்; அழிக்கச் சொல்லி ஏவினால் தன்வலிவுள்ளமட்டும் அழித்துக்காட்டும். மனிதன் நல்லவிதத்திலே கட்டளை பிறப்பிப்பானால் விஞ்ஞானம் நல்லதைச்செய்யும்; மனிதன் தீயநினைவோடு கட்டளையிடுவானானால் அது தீங்கையேபயக்கும். விஞ்ஞானம் நன்மை பயப்பதாயினும்—அது தீங்குபயப்பதாயினும், அது பயன்படுத்துவோரின்மனப்பண்பைப் பொறுத்திருக்கிறது. ஆகவேதான் திருந்தவேண்டியது விஞ்ஞானம் அல்ல, மனிதனின் மனப்பண்பே என்று அறிஞர்கள் பலர் அடிக்கடி அறிவுரைகூறி வருகின்றனர்.

கடவுள் செய்வதாகக்கூறப்படும் முத்தொழில்களையும் நாம் காணமுடியாது. அப்படிப்பட்ட முத்தொழில்களின் விளைவாக ஏற்படும் கொடூரக்காட்சிகளை மனித முயற்சியால் மாற்றியமைக்கமுடியாத அளவு கடவுள் வளர்ந்து நிற்கின்றார் என்று சொல்லப்படுகின்றது. மனிதனின் தனிப்பட்ட சம்பந்தமில்லாமலே "கடவுளின்" முத்தொழிலும் நடைபெறுகின்றன. ஆனால் விஞ்ஞானமோ எனின் மனிதனின் முழுக்கூட்டுறவால் முத்தொழிலையும் நடத்தி வருகிறது.

'கடவுள்' மனிதனுக்குக் கட்டுப்பட மாட்டார்: விஞ்ஞானம் மனிதனுக்குக் கட்டுப்படுகிறது. 'கடவுள்' மனிதன் விருப்பப்படி தன் போக்கை மாற்றிக்கொள்ள மாட்டார்; விஞ்ஞானம் மனிதனின் விருப்பப்படி தன் போக்கை மாற்றிக்கொள்ளும். மனிதன் 'கடவுளை'ப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமில்லை; 'கடவுள்' வேண்டுமானால் மனிதனைப்பற்றிக் கவலைப்படட்டும், உள்ளபடியே அந்தசக்தி உண்டென்றால். விஞ்ஞானம் மனிதனைப்பற்றிக் கவலைப்படாது; ஆனால் மனிதன் விஞ்ஞானத்தைப் பற்றிக் கவலைப்பட்டுத் தீரவேண்டும். ஆகவே மனிதனுக்குக் 'கடவுளின்' தொடர்பு இருக்கவேண்டிய அவசியமில்லை; ஆனால் விஞ்ஞானத்தின் தொடர்பு இருக்கவேண்டியது அவசியமாகும்.

விஞ்ஞானம் மனிதனின் சிறந்த ஏவலாள். விஞ்ஞானத்தின் உதவியால்தான் மனிதன் வளர்ந்து வந்தானேயொழிய, கற்பனைக் 'கடவுளின்' முயற்சியால் சிறிதுகூட வளர வழியேற்படவில்லை.

எனவே 'கடவுளை'ப்பற்றிக் கவலைப்படும் மதவாதிகளைவிட, விஞ்ஞானத்தைப் பற்றிக் கவலைப்படும் விஞ்ஞானிகளாலேயே உலகிற்கு அதிகமான அளவுக்கு நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன.

மனிதன் ஆக்கித் தரும் அளவுக்குத்தான் விஞ்ஞானத்திடம் சக்தி தேங்கி நிற்கும்; விஞ்ஞானிகள் இந்த அளவு உண்மையைத்தான் வெளியிடுகிறார்கள். மனிதனுக்கு அப்பாற்பட்ட ஆற்றல்கள் அனைத்தையும் 'கடவுள்' கொண்டிருப்பதாகவும், அதைத் தாங்கள் நேரே கண்டறிந்து கொண்டதாகவும் பொய்யுரைகள் புகன்று நிற்கின்றனர்.

மதவாதிகளைப் பற்றி ஒரு ஆங்கில அறிஞர் தாம் எழுதிய கட்டுரையொன்றில், "என்ன" என்பதில் குருட்டு நம்பிக்கை கொள்வார்களேயன்றி, 'ஏன்' என்றறிய மறுப்பவர்கள்" (The Fanatics of what and neglectors of why) என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆனால் விஞ்ஞானிகளோ, 'என்ன', 'ஏன்' இரண்டையும் அறிய அவாக்கொண்டனர். ஒவ்வொரு பொருளிடத்தும் என்ன? ஏன்? எப்படி? என்று கேட்டனர். விடைதெரிந்துகொள்ள முயன்றனர். முடிவு கண்டுபிடிப்புகளாக மலர்ந்தது.

'கடவுள்'—'விஞ்ஞானம்' இரண்டில், மனிதனின் வாழ்வுக்கு இன்றியமையாதது, வேண்டப்படுவது—நன்மை பயப்பது—இன்பங்கொடுப்பது விஞ்ஞானமேயாகும்! பொழுது போக்கு உரையாடலுக்கு வேண்டுமானால் 'கடவுள்' பயன்படலாம்!

*

10-ம் பக்கத் தொடர்ச்சி

நாடகத்தைப் பற்றி மிகவாக ஏதும் கூறத் தேவையில்லை. "ஓர் இரவு" நாடகம் ஏறத்தாழ நூற்றைம்பது நாட்களுக்கு மேலாகத் தஞ்சையில் நடைபெற்றது என்றால் அதன் சிறப்பு இனிது விளங்கும்.

நடிகர் குழுவினர்க்கும், வழக்கு நிதிக்கு ஆதரவு தந்த அனைவர்க்கும் என் நன்றியும் வணக்கமும்.

தோழர் நடிப்புப்புலவர் கே. ஆர். இராமசாமி, ரூ. 1150-ஐ, தோழர் சி. என். அண்ணாத்துரையிடம் சேர்க்கும்படியாகத் தோழர் இரா. நெடுஞ்செழியனைக் கேட்டுக்கொண்டார். தோழர் இரா. நெடுஞ்செழியன் அந்தப் பணியினை ஏற்றுக் கொள்ள ஒப்பினார்.

நாடகம் நடைபெறுவதற்குப் பெருமுயற்சி எடுத்து உழைத்தவரும், நாடக சபாவின் நிர்வாகியுமான தோழர் வீரப்பன் நன்றி தெரிவித்தார்.

நாடகம் இரவு 3 மணிக்கு இனிது முடிந்தது.

கண்ணீர்த் துளிகள்

பெரியாரின் பொருந்தாத் திருமணம் கண்டு, இச் செய்கை சுயமரியாதை இயக்கக் கொள்கைக்குக் கேடு சூழ்வதாகவும், எதிர்காலக் கட்சி வாழ்வை நாசம் செய்வதாகவும் இருக்கும் காரணத்தால், கழகப் பணிகளிலிருந்து விலகி நிற்பதாகக் கூறிக் கண்ணீர்த் துளிகளைச் சிந்திக் 'கண்டனக் கணை'களை ஏவியுள்ள தோழர்கள்:—

முன்ஞர் டவுன் தி-கழகத்தோழர்கள்:—ஜி- ஜே சாமுவேல், பி-பால்துரை, A-S-சாமுவேல், S. S-லட்சுமணன், S-மாரியப்பன், S-A-செல்வன், S-மாடசாமி, கே-ஜி-அந்தோனி, எம்-வெள்ளச்சாமி, பி-ஞானமணி, N-P-S-R-கருப்பையாவும் மற்றும் 80 தோழர்கள்:—தி-க-திருமலாபுரம்.

மு- இராமமூர்த்தி—யாழ்ப்பாணம்.

அ- பொ-சிவசர்மி—பாரதிகான நாடகசபா, அரசு நிலையம்

ந-இராமசாமி—கலாநிலையம், விருதுநகர்
சி-மு-சிவம்—செயலாளர், தி-க-காரைக்கால்
பா. சி-பெரியசாமி—தி-க-விருதுநகர்
பு-ரா. மதிவாணன்—தி-க., மதுரை
கே-ஜெ-ஷெய்க்—தி-க-திருத்துறைப்பூண்டி.
ர-தாவீது தவமணி—தி-க-பாளையங்கோட்டை
ஜி-பி-பக்கிரிசாமி—தி-க-கோபி
எம்-சண்முகம் திருவண்ணாமலை
மு-வழுவன்—தி-க-பொள்ளாச்சி
மதிவாணன்-தி-க-சென்னை
ஏ- எம்-ஜாக்கரையா—மேலக்காவேரி, கும்பகோணம்
ஆ-ஷௌக்கத்திலி ,, ,,
அ-ப-மயிலன்-தி-க அருப்புக்கோட்டை
மு-சண்முகசுந்தரம்-தி-க பொன்மலை.
மீ-இராமலிங்கன்-தி-மா-க மதுரை
S-P-மாறப்பன்— தி-மா-க பெரியகோழிபாளையம்
வி-ஆர்-ரத்தினம்—தி-க-திருமங்கலம்
வே-குருசாமி—தி-க-ஆத்தூர்
மு-கண்ணப்பன்—"தமிழகம்" காவேரிப்பாக்கம்

மீனாக்ஷிபுரம் கழகத் தோழர்கள் S-V-S-மீனாக்ஷி, வி-செல்லம், எம்-ஆரியசங்கரன் S-V-சக்கரை ஏ-அப்துல்ரஜாக் ஆர்-பொன்னப்பன், பி-ராமசாமி, கே-மாரிமுத்து, S-M-சுந்தரம், ஆர்-ஏ-ராஜன், கே-ஏ-பாக்கியம், எம்-ஏ-அபீர், ஏ-கே-பாட்சா, ஆர்-அசன்முகம்மது, டி-லக்ஷ்மி, K-S சந்திரன், A-S-முத்துச்சாமி, கே-என்-சிவாசலம் கே-கே-கான்முகம்மது, ஏ-அப்துல்ரஹ்மான், கே-அப்துல்மஜீத், ஜி-ஏ-அப்துல்லா, வி-நடராஜன், S-துரைசாமி, எம்-வி-குமார்,

திரு-கேசவன்
செ-க-சீனிவாசன் } —தி-க-செங்குட்டை

எல்லப்பா—ஜெயராமன்-சென்னை

களம்பூர் கழகத்தோழர்கள்:—கே-அர்ச்சுனன், S-சின்னக்கண்ணு, S-M-அண்ணாமலை, கே-ஆர்-கணேசன், கே-பி-துரைசாமி, டி-ஜே-தங்கவேல், கே-பி-கண்ணன், டி-ஜே-வரதன், ஏ-கோவிந்தசாமி, S-பச்சியப்பன்

வளவனூர்த் தோழர்கள்:— வ-சோமு, N-K-S-கிருஷ்ணசாமி, ஆ-தர்மலிங்கம், S-கதிர்வேல், என்-செல்வராஜ், என்-பழனிச்சாமி, என்-நாமதேவன், எம்-பழனிச்சாமி, கோ-கிருட்டினன் ஏ-அப்துல்சுபான், ஏ-அப்துல்வகாப், கி-கணபதி, வி-சாமிக்கண்ணு, எம்-பழனிச்சாமி, எஸ்-ஜகதீசன், எம்-பாலகிருட்டிணன், ஜே-கனகஅரசன்.

ரா-ராமச்சந்திரன்—இராசபாளையம்
டபிள்யு-கே-தேவராசன்—தி-க-வாலாஜாபாத்.
கே-ர-ஷாகுல்ஹமீது—மேலக்காவேரி, குடந்தை.

என்-சிங்காரவேலன்,
எம்- மதுரம்,
தட்சிணாமூர்த்தி } தி-க-திருவையாறு.

க-மு-முகம்மதுயாசின்—டரமக்குடி.
பி-ஏ-முகம்மது இப்ராஹீம்—தி-க-அம்மாபட்டினம்.

ஆதனூர் திராவிடர் கழகத்தோழர்கள்:— S-S அருணானந்தம், அ-ஆ-இராயப்பன், அ-பிரான்ஸிஸ், S. வேதநாயகம், கே-வி-மரியாலங்கம், S. எம். சுந்தர், ஏ—அருளப்பன், S. சின்னப்பா

தி-மதியழகன்—ஆசிரியர், "சுடரொளி" நாகூர்.

சிலோன் வெலிசரைத் தோழர்கள்:- கே. ரங்கசாமி, வி. மாணிக்கம், கே. கிருஷ்ணன், எம். எதிராஜு, என். மொட்டை, எஸ். வேலு, எஸ். ஏ. ரகீம், ஆர். பாண்டுரங்கன், எம். முனுசாமி, ஏ. ஆசை, என். அயோத்தி, கே. சங்கிலி, பி. அளகிரிநாதன், பி. ஞானப்பிரகாசம், எஸ். சுப்பய்யா, வி. வேலாயுதம், ஏ. கண்ணன், என். கண்ணன், டி. முனுசாமி, எஸ். பாலய்யா, கு. க. பிச்சையா, பி. எஸ். துரைசாமி.

மதுரை – பி. வெங்கிட்டகிருஷ்ணன்
மாநகர் – கே. எஸ். அருளையா
கொழும்பு — பஞ்சிகாவத்தை, தி-க தோழர், வி. ஆர். பாண்டியன்
யாழ்ப்பாணம் — கோ. இராமசாமி, கா. சபாரத்னம்
வேப்பம் குறிச்சி – எம். விஸ்வநாதன்
கோயமுத்தூர் – எம். சண்முகன்
கும்பகோணம் – ச. சொக்கநாதன்
ஆனைமலை – ஆ. ரா. வெற்றிவீரன்
சுண்டக்காமுத்தூர் – ச. கு. தாண்டவன்

ஆண்டிப்பட்டி – கே. ஆர். ரங்கசாமி
புதுச்சேரி — தொ. ஜெயராமன்
திருப்பூர் — பி. எஸ். ஜானகிராம்
ஊமைய்யனூர் – பி. பொன்னுசாமி
நாயினூர் கோயில் – பி. பாஸ்கரன் மூலம் ஊர்ப் பொதுமக்கள் தீர்மானம்
இராயமுண்டாம்பட்டி — என். வெங்கிடாசலம்
திருச்செந்தூர் — ஆறுமுகனேரி, தி-க தீர்மானங்கள்

ஓமலூர் தாலுக்கா, கஸ்ப மூக்கனூர்த் தி. க. உறுப்பினர்கள்:— நாராயணன், வீரப்பன், குழந்தை, பெருமாள், முத்து, மாணிக்கம், எம். ரங்கசாமி, பி. பழனிசாமி, பழனி, வெங்கட்டராமன், சுப்ரமணியம், ஐயனூர், வெ. கோபால் (தலைவர்) மு. கி. ரா, எஸ். ஜெயராமன், எம். ஆர். அரங்கன், எம். ஆர். ஜெகன்னாதன், தி. விஸ்வநாதன், தா. சுப்ரமணியம், மாரீசன், ர. ராமச்சந்திரன், வி. கோவிந்தன், ச. கிருஷ்ணராஜு, வ. அ. மலையாண்டி, தி. ராமசாமி, கே. நந்தியான், ஐ. பழனி, குப்பன், ஐயம் பெருமாள், கோ. அய்யாசாமி

கோயமுத்தூர் — எஸ். மாரியண்ணன், எம். சுந்தரராசன், எம். ஷேக்தாவுத்.

வடகோவைத் தி. க. உறுப்பினர்கள்:— எம். கனகரத்னம், ஆர். அழகர்சாமி, சுப்பையன், கோ. சா. ஆறுமுகம், பி. மதலைமுத்து, சின்னசாமிராமு, கோபால்கிருஷ்ணன், கே. இராமகிருஷ்ணன், பி. எஸ். சேதுராஜன், ம. கி. இராசகோபால், ஏ. கிருஷ்ணசாமி, எஸ். ஆறுமுகம், சி. என். முத்துசாமி, என். கரியப்பன், வி. கோபால்சாமி, கே. எம். டி. மணி, எஸ். பி. கிருஷ்ணமூர்த்தி, ஆர். கே. பிள்ளை, எம்.எஸ். பிள்ளையும் மற்றும் பலரும்.

சென்னிமலை—கு. இரத்தினம்
கோயமுத்தூர்—எம். சாமியப்பன், சி. என். கோவிந்தராஜுலு, சி. டி. கிருஷ்ணசாமி
திருப்பாப்புலியூர் — ஆ. சி. ரெங்கசாமி
புங்கவர்நத்தம்—தி. க. தோழர்கள்:— த. ரத்னசாமி, மு. காசி, வெ. குருசாமி, சோ. மணிமுத்து
போடிநாய்க்கனூர்—அ. அ. பரமசிவன்
மயிலாப்பூர்—சி. சண்முகம் வ. வா. க.
சென்னை—கருணாகரன், பாலகிருஷ்ணன்
கூந்தலூர்—எஸ். நடேசன்
ஏழாயிரம்பண்ணை—தி. க. தீர்மனம்

நாகபட்டினம்—எஸ். பி. சாமி, எம். அய்யாவு, எம் கேசவன், எம். கணபதி, பி. முத்து, சி. துளசி, என். ராமன், கே. என். சாமி, கே. வி. குமாரி, கே. வி. கிட்டு, ஆர். ஆர். இராஜு, நி. கருப்பண்ணன்.

கூத்தாண்ட அள்ளி—க. வெ. சின்னசாமி
சென்னை—எம். ஆர். சந்திரன், வி. நா இராமசாமி
பரமக்குடி—எஸ். ஏ. நல்லதம்பி

தஞ்சாவூர்—எம். சற்குணபாண்டியன், க. அமிர்தலிங்கப்பெருமாள், கே. உத்ராபதி, எஸ். கணேசன், தி. சுந்தரராஜன்

கும்பகோணம்—ஒளியழகன்

மதுரை பாலமேடு—ஏ. இராமய்யா தி. க. துணைச் செயலாளர், அ. தங்கராசன்
திருப்பூர்—எம். இளமசாமி, டி. ஆர். கவுஷ்
மதுரை—பி-இரத்னம்
தூத்துக்குடி—ஞா-செ-மகாலிங்கம்
பாலமேடு—தி-க-செயலாளர் ஆ-குமாரவேலு
வள்ளூர்—முருகேசன்
திருவல்லிக்கேணி—லெ-இராமய்யா
திருச்சேறை—தி-க-தீர்மானம்
சென்னை—கே. ஆரியசங்கரன்
சிவகாசி—செல்லக்கனி

யாழ்ப்பாணம் புலோலி—கந்தமுருகேசன் மூலம் தி-க-தோழர்கள்:— வே. சோமசுந்தரம் B. Sc., க-பொன்னையா, பொ-செல்லத்தம்பி, தா-பூவாலன், ஆ-இராசன், சி-சிற்றம்பலம், எம்-சி-சுப்ரமணியம், ஜீ-எம்-பொன்னுத்துரை, க-இரகுநாதன், க-பசுபதி (ஆசிரியர்) மு-நடராசா, கி-பாலசுப்ரமணியம், இ. இராமநாதன், து. மகேந்திரன், ப. கிட்டினன், வ. நாகலிங்கம் (ஆசிரியர்) நா. நாகசுந்தரம் (ஆசிரியர்) ச. சின்னத்துரை (ஆசிரியர்), மு. வேலாயுதம், க. வீரகத்திப் பிள்ளை (ஆசிரியர்) க. ஆழ்வார்ப் பிள்ளை, கி.குமாரசாமி (மருத்துவர்) சி. சுப்ரமணியம் (பண்டித வித்வான்) சே. தியாகராசா.

சம்மட்டிபுரம்—க. சீ. கலியபெருமாள் செயலாளர் தி. இ. கழகம்
வந்தவாசி பள்ளி மாணவர்கள் — மு. அரங்கநாதன், நா. பச்சையப்பன், ர. செல்வப்பெருமாள், கா. அ. சரீப், கொ. ம. கிருஷ்ணன், பெ. வேதகிரி.
கூடலூர்—கோ. ரங்கராசன், தி. க.
சீரங்கம்—வி. சீனுவாசன் மூலம் தி. க. தீர்மானம்
சென்னை ஆயிரம் விளக்கு—இரா-முடியரசன் மூலம் மறுமலர்ச்சி மன்றத் தீர்மானம்
சென்னை ஏழுகிணறு—ஆ. பெ. மரியதாஸ்
முத்துப்பேட்டை—டாக்டர் டி. என். சிவசங்கரன்
திருச்சேறை—பா. செங்குட்டுவன்
தூத்துக்குடி—சு. அர்ச்சுனன், எம். செல்லச்சாமி
நாகர்கோயில்—ஆர். இராமலிங்கம்
நாடியம்—இரா. இராமச்சந்திரன்
மன்னார்குடி—எம். இராசகோபால் தி. க.
கான்பூர்—ப. ச. இராமன்
பவானி—பி. சுவாமிநாதன், தி. க. செயளாளர்

மட்டக்களப்பு பகுத்தறிவியக்கக் கொழும்புத் தோழர்கள்:—எஸ். டி. எஸ். நாயகம், பொ. நடராசா, ஆசிரியர் 'உதயம்', க. இராசதுரை, பி. தமிழ்ப்பித்தன், எம். ஹனிபா, ஜே. மைக்கேல், நல்லூர் நடன். கே. கையாலன், ஆ. தங்கராஜ், எம். முகம்மது, எச். மகரூப், ஏ. அந்தோனி, கே. கிறிஸ்டி, ஒ. கு. செல்வன், செல்வி, கமலா, மேரி, எலிசபெத், கோமதி, முத்துலட்சுமி, தாமரைக்கண்ணி, எலிசபெத்.

தூத்துக்குடி—ஏ. இராயப்பன் வடக்கூர் தி. கழக செயலாளன்
சென்னை-18-வதுவட்டத் தி-க-தோழர்கள்:— எம். பி, அர்ச்சுனன், டி. நித்தியானந்தம், எம். சுப்ரமணி.

டி. பெருமாள், பி. கிருஷ்ணன், பி. ஆர். பி. சாமி, கே. வி. அர்ச்சுனன்.

தூத்துக்குடி—ஏ. எஸ் நடராசன்
விருதுநகர்—மாரி—சுந்திரராசன்
துடுப்பதி—பெ. வெங்கடாசலம்
விக்கிரமசிங்கபுரம்—சு. சு. முத்து
கள்ளக்குறிச்சி—ப. இலக்குவன், தி. கழக துணை ச் செயலாளன்
கோயமுத்தூர்—கே. இராமதாஸ்
காரைக்குடி—சு. கணேசன்
மதுரை - எஸ். முத்தையா
திருத்துறைப்பூண்டி—வே. குப்புச்சாமி, ஆர். எஸ். கண்ணு
புதுக்கோட்டை—எஸ். முத்துவேலு
மதுரை—அ. பாண்டியன், சி. பாக்கியம்
கும்பகோணம்—கே. கே. பாலன்
காரைக்குடி – ஷேக் இஸ்மாயில்
வரகூர் – டி. ஆர். நடராசன், புஷ்பவல்லி
கப்பைக் குடிக்காடு – சி. என். ஏ. இராமநாதன்
புதுமடம் — சு. குருசாமி
சென்னை – எஸ். எஸ். மணி

காவேரிப்பாக்கம்—தி-க, உறுப்பினர்கள்:— சி. இராதா கிருட்டினன், மு. கண்ணப்பன், கே. பி. இராமன், பி. எஸ். இராஜ், கே. கேசவன், வி. கிஷ்டப்பா, எஸ். ஆனந்தன், சுப்ரமணியம், எம். வீரராகவன், எம். இரங்கநாதன்

மதுரை – வெ. சௌந்தரராசன் நகர - தி, கழகம்
எத்தாப்பூர் — டி. எஸ். பாலசுப்ரமணியம், வை. எஸ். பரசிவம், தி-மா, இல்லம்
புதுச்சேரி — டி. கண்ணன்
இலுப்பையூரணி — எம். ஆர். ஆர்தர் வில்லியம் தி. க. செயலாளர்
பம்பாய்—கு. பெ. துரைசாமி, எம். எஸ். கண்ணையா.
கோயமுத்தூர்—எம். துரைரத்தினம் மூலம் வட கோவை தி. க. தீர்மானம்.
கோவை—எச். மதன்.
வட சென்னை—கூடலூர் சு. வ. தியாகராசன்
கள்ளக்குறிச்சி—சி. சங்கரபத்தர்
மணப்பாறை—என். வடிவேல், அ. பொ. ரகுநாதன், பி. தாமஸ்

காரைச்சி—தி. க. உறுப்பினர்கள்:— ஏ. தங்கப்பாண்டியன், ர. சிதம்பரம், சு. கருப்பசாமி, கா. இராசமணி, தெ. சி. சங்கரரங்கராஜ், ஏ. வெற்றிவேல், டி. ஆறுமுகம், சி. செ. வெள்ளைச்சாமி, சு. வேல்பாண்டியன், இன்னாசிமுத்து, சோ. வ. முத்து, மகாலிங்கம், ச. ப ச் சை க் க னி, சி. குருசாமி, தே. குருசாமி, ச. துரைராஜ், பொ. அருணாசலம், வி. கே. சோலையா, எஸ். கருபண்ணன், பி. இருளாண்டி

பழனி—ஏ. ஜி. சாமி
ஆழ்வார்திருநகரி—வள்ளுவர் கழகத் தீர்மானம்
பால்துளம்—த. தனசேகரன்
ஆவடி—இராணுவத் தோழர்கள்: — கே. பி. து ரை சாமி, பி. கிருஷ்ணன், எஸ். கே. பிரான், ஈ. என். ரஹீம், வி. பக்கிரிசாமி, எம். பாலன், தே. கே. சிவப்பிரகாஷ்—மற்றும் பலர்
எடலக்குடி—வி. எம். ஜோன்
சூலூர்—தி. க. தீர்மானம்
குணியமுத்தூர்—மா ண வ ர் மன்ற உறுப்பினர்கள் (110) நூற்றுப் பதினமர் தீர்மானம்
கடலூர்—இர-கிருஷ்ணமூர்த்தி தி. க. நிர்வாக உறுப்பினர்
திண்டுக்கல் - நகர திராவிடர் கழகத் தலைவர் முத்து
சென்னை—தி. மா. இராமு, ஜெயராமன்
லால்குடி—எல். கே. வரதராசன்
ஆலந்தூர்—கோ. நாரயணசாமி

அய்யன் பேட்டை—வ. உ. சி. கழக உறுப்பினர்கள்:— எம். எல்லப்பன், வே. பாலசுப்ரமணியம், பி. அண்ணாமலை, ரா. வெங்கடாசலம், முருகசாமி, கே. சுந்திரவடிவேல், சா. இராமசாமி, சா. இராமசாமி, டி. கைலாசம், வி. வேல்முருகன், கோ. பொன்னம்பலம், எஸ். காளத்தி, மு. இராஜி, சாரங்கபாணி, க. சுட்பராயன், மு. தங்கராசா, எஸ். குப்புசாமி, என். பஞ்சாட்சரம், ச. தாமோதரன், பாலு, ஆ. முத்துகுமாரசாமி, மா. க ன் னை ய ன், மு. பால கிருட்டினன், தெ. பாலு, க. சடையாண்டி.

திருச்சி—மலைக்கோட்டைத் திராவிடர் க ழ க உறுப்பினர்கள்:— ஆர். நாகசுந்திரம், டி. எல். மாணிக்கம், எம். தங்கவேலு, எஸ். க ணே ச ம், டி. எல். மருதமுத்து, என். முத்து, மா. தூயமணி, எஸ். சதாசிவம், வி. ராமசாமி, என். தம்பையா, பெ. ராமசாமி, டி. எஸ். கந்தன், வி. எல். நடராஜன், டி. ஏ. கண்ணப்பன், இ. பா ல ன், டி. எல். ராஜகோபால், என். பிச்சை, எஸ். அ ங் க மு த் து, எஸ். நெடுமாறன், அ. முனியன், டி. கே. ரெங்கராஜன், சிவபுண்ணியம், எம். வடிவேல், டி. எம். நல்லசாமி, டி. எஸ். சண்முகம், வி. ராமசாமி, எஸ். ராமனுதன், டி. சண்முகம், கோ. சின்னையா, பிள்ளை, ஆர். முத்துசாமி, எம். சீனிவாசன், எம். நாகராசன், கெ. அ. சுப்பய்யா, சி. ஆர். ஜெம்புலிங்கம், டி. பி. திருநாவுக்கரசு, ஜி. சௌரிராஜன், ஆர். எம். என். கே. சுந்தரம், டி. எம். எ. லோகநாதன், சி. ர ா ஜ ர த் தி ன ம், தி. மு. பாலசுப்ரமணியம்

தளவாய்புரம்:—திராவிடர் கழக உறுப்பினர்கள்:— மா. மா. அருணாசலம், பு. கா. ச. காளிமுத்து மு. ச. அ. சுப்பையா, எம். எஸ். அனந்தப்பன் வீ. பு. லக்ஷ்மணன், ரு. க. த ங் க ர த் தி ன ம், அ. ரு. ஆதிநாருயணன், மா. சி ன் ன ச் சா மி ஏ. எஸ். ஏ. சாமி, ஏ. அய்யம்பெருமாள், எஸ் காளிமுத்து, ம. ச ண் மு க வே ல் மு. ச. அ. காளியப்பன், அ. மாரியப்பன் வி. வேல்முருகன் மா. கணபதி, சு. பழனிசாமி, க. பொன்னப்பன் ச. தாளமுத்து, ச. நாகரத்தினம், எஸ். ருசகோபால், வீ. பு. சீனிவாசகம், ரு. க. பார்ச்சாமி பொ. ருமசாமி, பி. செல்லப்பன், எம். ரத்தினம், க. ச. சாமுவேல், இ. இ. ப. அ ம் மை ய ப் ப ன் கு. முத்தையா, கு. கனிவப்பன், பா. வேல்ச்சாமி, மா. குருசாமி, ச. கணபதி, பொ. ஆதிநாராயணன் இ. ரு. நா. கணபதியப்பன், ஏ. ஆர். எஸ். ஆதிநா

ராயணன், டா. பாலப்பன், எஸ். அண்ணாமலை- ஆ. மு. ரு. கணபதியப்பன், எஸ். மாரிமுத்து, பா. அய்யாச்சாமி, அ. வன்னியப்பெருமாள் சி: அய்யாச்சாமி: க. சங்கரலிங்கம், உ. காளியப்பன், அ. கணபதியப்பன், இ. கணபதியப்பன் மா. அ. சிவசுப்பிரமணியம், மு. அருஞ்சுனை, உ. மாயாண்டி, கு. மு. ராமசாமி, த. ரெங்கசாமி, மா. கணபதி, மு. செஞ்சார்க்காளை பா. வன்னியராசன். சுப்பையா, ச. தஙகராஜ நயனார் சீ. பால்ச்சாமி, மா. கணபதியப்பன் ச. மாரியப்பன் ஆ. மு. ரு. முனியாண்டி ஏ. ராமசாமி நாடார் ல. ரா. பாலகிருஷ்ணன், மா. கனகசபாபதி, சா. தருமர்நாடார், அ. ப. கணபதி, இ. ரா. நா. ருமசாமி.

விருதுநகர்—நகரவாசிகள்:—கே. கணேசன், பா. சி. பெரியசாமி, எஸ். எம். சோமசுந்தரம், எஸ். தெய்வநாயகம், சு. சண்முகம், வீ. அ. இராமசாமி, சீ. சு. பெ. நாகரத்தினம், கா. க. இர. பாஸ்கர், எம். எம். எஸ். வயிரம், சு. இளம்வழுதி, என். கோ. விரதன், ஏ. எம். நாகூர், மீரா, டி. வ. எஸ். சங்கர சுப்ரமணியம், ர. சுப்ரமணியம், கு. பொன்னப்பன், சி. பெரியசாமி, எச். சித்தய்யன், அ. வன்னியராசன், கே. தியாகராஜன், எம். ரத்னசாமி, பி. அருணாசலம், சு. மாரியப்பன், த. சு. வேல்சாமி, எல் எஸ். பொன்னுசாமி, பி. திருமுடி மூ. பழனிச்சாமி, க. மாரியப்பன், விநாயகமூர்த்தி எம். அருணகிரி, நா. வெள்ளைச்சாமி, கதிர்காமன, கருமுத்து, செல்லையா, தானியேல், ஆ. பொ. சண்முகம், மா. கணபதி, சி. ச. குருசாமி, க. செல்லையா, க. குருவாம்பாள், சீ. பாய்ச்சாமி, அ. ச. மாரியப்பன், எஸ். அருணாசலம், வை. பழனியப்பன், வி. நாகசுந்தரம், கே. கே. பெரியசாமி, மா. அழகர்சாமி, ச. நடராஜன் (தி. க. செயலாளன்) கா. சுப்பையா, அ. சங்கரபாண்டியன், S.K.S. தங்ராஜ், ஏ. எஸ். பெரியசாமி, என், சவுந்தரபாண்டியன், கு. சுருளி, ஆர். ஏ. சோலையப்பன், க. குருசாமி, (தி. க. உதவி செயலாளர்) மா. வெள்ளையப்பா, ரு. மாரியப்பன், மா. தங்கப்பன், டி. சுப்பய்யா, கு. கந்தசாமி, என். குருசாமி, வே. பழனிச்சாமி, சு. இரத்தினம், பெ. நாகரத்தினம், பெ. நடராசன்—மற்றும் பலர்.

புதுக்கோட்டை—லெ. ஆதியப்பன்
திட்டக்குடி—ம. பொன்னம்பலம்
தஞ்சாவூர்—நா. மீனாட்சி சுந்தரம்
வேம்பார்—தி. க தீர்மானம்
சிவில்லிபுத்தூர்—ப. சிவகாமிநாதன் தி. க. செயலாளன்
ஆவடி—எஸ். அண்ணாமலை, கே. வேணுகோபால்.
மதுரை—மீனாட்சிபுரம் செல்வம் திராவிடர் கழக நிர்வாகக் கூட்டத் தீர்மானம் (செயலாளர் எஸ். துரை மூலம்)
புனய்வாயல்—கே. பாலசுந்தரம்.
பொன்மலை—ஏ. கோவிந்தசாமி, சி. இராமய்யா.
தூத்துக்குடி—சொ. சுப்பையா
பெரம்பலூர்—இரெ-பழனிவேலு மூலம் தி. கழக தீர்மானம்
சென்னை சூளை—வ. கு. கோவிந்தசாமி திராவிட கழக உறுப்பினர்.

(தொடரும்.)

வேண்டுகோள்

பேரன்புடையீர், வணக்கம்.

தங்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றுத் தொண்டாற்றி வந்த "திராவிடன்", நம் இயக்கத்தால் நடைபெற்றுவந்த சமீபகால போராட்டங்களில், யான் தீவிர பங்குகொள்ளவும், சிறை செல்லவும் நேரிட்டதால், சில மாதங்களாக வெளிவரவும், யான் எனது சொந்த முயற்சியில் கவலை கொள்ளவும் முடியாது போயிற்று.

"திராவிடன்" வார இதழ் நடைபெற்றுவந்த காலத்திலுங்கூட ஏற்பட்ட சிறு கஷ்டங்களின் போதும், கூடுமானவரை அதன் வருவாயைக் கொண்டே சரி கட்டி வந்தேனேயல்லாது, இதுவரை எவரிடமும் நன்கொடை கேட்டதுமில்லை.

யான், மீண்டும், அதாவது 1949 ஆகஸ்டு 1-ந் தேதியிலிருந்து "திராவிடன்" வார இதழைத் துவக்கி அதன் மூலம் தொடர்ந்து தொண்டாற்றுவதென உறுதி கொண்டு துவக்க ஏற்பாட்டைச் செய்தும் வருகிறேன்.

ஆனால், இன்றுள்ள நிலையில் அச்சகக் கூலியையும், பிறவற்றையும் சரி செய்வதென்பது மிக மிகக் கஷ்டமாயிருப்பதாலும், சில சமயங்களில் அவ்வித நெருக்கடிகளுக்கு யான் ஆளாகிய காரணத்தாலும், "திராவிடன்" மேலால் தொடர்ந்து வாரந் தோறும் தவறாமல் வெளிவருவதற்கான முறையில், மிகச் சிறிய அச்சகம் ஒன்று அமைத்து, தொண்டாற்ற முற்பட்டுள்ளேன்.

எனவே, இது சமயத்தில் எனது வேண்டுகோளை, தாங்கள் ஆதரித்து, தங்கள் சார்பிலும், தாங்கள் சம்பந்தப்பட்டுள்ள கழகத் தோழர்கள், பிரமுகர்கள் சார்பிலும் (அதிக தொல்லையில்லாத அளவில்) உடனே பொருளுதவி செய்து எனது முயற்சிக்குப் போாதரவும், ஊக்கமும் அளிக்கப் பணிவாய் வேண்டிக்கொள்கிறேன். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

அன்புள்ள,

என். வி. நடராசன்,
"திராவிடன்". ஆசிரியர் & உரிமையாளர்.
18, பெருமாள் முதலித் தெரு,
ஜி. டி. சென்னை (1)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi Street. Kancheepuram.